بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ نَحْمَدُهُ وَنُصَلِّيْ عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ وَعَلٰى عَبْدِهِ الْمَسِيْحِ الْمَوْعُوْدِ

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

தொகுதி 8

இதழ் 42

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian Tamil

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரி கமரி 1445 -ரபீயுஸ்ஸானீ-03 ஹிஜ்ரி ஷம்ஸி 1402 - அகா 19

★ 19 அக்டோபர் 2023


## அல்லாஹ்வின் கட்டளை

لَقَدْ كَفَرَ الَّذِيْنَ قَالُوْٓا اِنَّ اللّٰهَ هُوَ الْمَسِيْحُ
ابْنُ مَرْيَمَ ۭ قُلْ فَمَنْ يَّمْلِكُ مِنَ اللّٰهِ شَيْـًٔا
اِنْ اَرَادَ اَنْ يُّهْلِكَ الْمَسِيْحَ ابْنَ مَرْيَمَ
وَاُمَّهٗ وَمَنْ فِي الْاَرْضِ جَمِيْعًا

**பொருள்**

நிச்சயமாக மர்யமின் மகன் மஸீஹ் தான் அல்லாஹ் எனக் கூறுகின்றவர்கள் உறுதியாக நிராகரிக்கின்றவர்களாகிவிட்டனர். நீர் அவர்களிடம் கூறுவீராக! மர்யமின் மகன் மஸீஹையும், அவருடைய தாயாரையும் பூமியிலுள்ள அனைவரையும் அல்லாஹ் அழித்து விட நாடினால் அவனுக்கு எதிராக ஆற்றல் பெற்றவன் எவன்? (அல்மாயிதா: 18)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**அல்லாஹ்வின் இருப்பு மட்டுமே உண்மையிலேயே நன்மை பயக்கூடியதாகும். அவ்வாறிருக்க மனிதன் அந்நியர்களின் வாசல்களில் மூக்கைத் தேய்த்துக் கொண்டிருப்பது எந்த அளவிற்கு வெட்கக் கேடாகும்.**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

### அல்லாஹ்வின் இருப்பே உண்மையில் நன்மை பயக்கக் கூடியதாகும்

உலகில் மக்கள் அதிகாரிகள் அல்லது மற்ற நபர்களிடம் ஏதாவது ஒரு வகையில் பயனடையும் ஒரு கற்பனையான நம்பிக்கையில் அவர்களை மகிழ்ச்சியூட்டுவதற்காக எவ்வாறெல்லாம் துதிபாடுகின்றனர்! எந்த அளவுக்கென்றால் கீழ்நிலை தொழிலாளர்கள் மற்றும் ஊழியர்கள் வரையிலும் மகிழ்ச்சியடையச் செய்ய நேரிடுகின்றது. ஆனால் உள்ளபடியே அந்த நபர் ஒருவேளை திருப்தியும், மகிழ்ச்சியும் அடைந்து விட்டாலும் கூட பின்னர் அவர் சில நாட்கள் வரை அல்லது ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் மட்டுமே நன்மை பயப்பார் என்று எதிர்பார்க்க முடியும். இந்த கற்பனையான நம்பிக்கையில் மனிதன் அந்த அதிகாரியின் ஊழியர்களை எந்த அளவிற்கு துதிபாடுகின்றான் என்றால் அதுபோன்ற புகழ்ச்சியை எண்ணிப் பார்த்தாலே நடுங்கி விடுகின்றது. மேலும், அறிவிலியான மனிதன் தன்னைப் போன்ற சக மனிதனை ஒரு கற்பனையான நம்பிக்கையில் இந்த அளவிற்கு துதி பாடுகிறானே என்று எனது உள்ளம் வேதனையால் நிறைந்து விடுகின்றது. ஆனால், எந்த பிரதிபலனும் இல்லாமலும் முறையீடு இல்லாமலும் மனிதன் மீது எல்லையற்ற அருள் செய்துள்ள உண்மையாகவே அருளக் கூடிய அந்த இறைவனை மனிதன் சற்றும் பொருட்படுத்துவதில்லை. ஆனால் உள்ளபடியே அந்த மனிதன் ஒருவருக்கு நன்மை பயக்க விரும்பினாலும் தான் என்ன ?

நான் மெய்யாகவே கூறுகின்றேன். இறைவனையன்றி எந்த நன்மையும் கிடைக்க முடியாது. ஒருவர் பயனடைவதற்கு முன்னரே அவருக்கு நன்மை பயக்கக் கூடியவர் இந்த உலகிலிருந்தே சென்று விடலாம் அல்லது எந்த பணியும், நன்மையும் அவரிடமிருந்து பெற முடியாத அளவில் அவர் ஏதாவது ஓர் அபாயகரமான நோய்க்கு ஆளாகிவிடலாம்.

சுருக்கமாக, அசல் விஷயம் இதுவேயாகும். அதாவது, மனிதனுக்கு அல்லாஹ்வின் கருணையும் அருளும் கிடைக்காத வரை மனிதன் எவரிடமிருந்தும் எந்த நன்மையும் அடைய முடியாது. அவ்வாறிருக்க, அல்லாஹ்வின் இருப்பே உண்மையான நன்மை பயக்கக் கூடியது ஆகும். பின்னர், மனிதன் அந்நியர்களின் வாசல்களில் மூக்கை தேய்த்துக் கொண்டிருப்பது எந்த அளவிற்கு வெட்கக் கேடானது ஆகும்.

ஓர் இறை பற்று கொண்ட நம்பிக்கையாளரின்

**இதன் தொடர்ச்சி : 9ம் பக்கம்**

## நபிமொழி

### (விருந்துக்கு) அழைக்கப்படாதவர் அழைக்கப்பட்டவருடன் வந்துவிட்டால்

(2456) ஹஸ்ரத் அபூ மஸ்ஊத் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அபூ ஷுஐப் என்றழைக்கப்பட்டு வந்த ஒரு அன்ஸாரி சகோதரருடைய ஓர் அடிமை இருந்தார். அவர் இறைச்சி வெட்டக் கூடியவர் ஆவார்.

எனக்காக ஐந்து நபர்களுக்குரிய உணவை தயார் செய்வீராக; நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு விருந்து கொடுக்கக் கூடும். அன்னாரையும் சேர்த்து ஐந்து நபர்கள் இருப்பார்கள் என்று அபூஷுஐப் (ரலி) அவரிடம் கூறினார். மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முகத்திலிருந்து அன்னார் பசியுடன் இருக்கின்றார்கள் என்பதை அவர் அறிந்து கொண்டார்.

எனவே அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விருந்திற்காக அழைத்தார். மேலும், அன்னாருடன் அழைக்கப்படாத மற்றொரு நபரும் இணைந்து கொண்டார்.

இவரும் எங்களுடன் வந்துவிட்டார்; நீர் அவருக்கு அனுமதி கொடுக்கின்றீரா?என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள்.

(அதற்கு) ஆம்! என்று அவர் கூறினார்.

### பிறரிடம் சண்டையிடக் கூடியவரை அல்லாஹ் மிகவும் வெறுக்கின்றான்

(2457) ஹஸ்ரத் ஆயிஷா (ரலியல்லாஹு அன்ஹா) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து அறிவிக்கின்றார்கள்: அன்னார் (ஸல்) கூறினார்கள்: அல்லாஹ்வின் பார்வையில் மனிதர்களில் எல்லாரையும் விட மிகவும் வெறுக்கத்தக்க நபர் (எப்போது பார்த்தாலும்) கடுமையாக சண்டையிடக் கூடியவர் ஆவார்.

(ஸஹீஹ் புகாரி, தொகுதி 4,பாடம்- மஸாழிம், காதியான் பதிப்பு- 2008-ம் ஆண்டு)

* * * * * * *

**நீண்ட துன்பங்களிலிருந்து பதற்றமடையக் கூடாது. நமக்கு முன்னர் கிறிஸ்தவ சமுதாயத்திற்கு முந்நூறு ஆண்டுகள் வரை துன்பங்கள் கொடுக்கப்பட்டன. ஆனால், அவர்கள் பொறுமையை கைகொண்டார்கள். மேலும், இறுதியில் அந்தப் பொறுமைக்கான மிகவும் இனிமையான கனிகளை உண்டார்கள். எனவே நீங்கள் அவசரப்படக் கூடாது. இன்னும் கூறப்போனால் உங்களது பணியில் நீங்கள் ஈடுபட்டு இருக்க வேண்டும். மேலும், உறுதிப்பாட்டுடன் துன்பங்களை எதிர் கொள்ள வேண்டும்**

وَلَبِثُوْا فِيْ كَهْفِهِمْ ثَلٰثَ مِائَةٍ سِنِيْنَ
وَازْدَادُوْا تِسْعًا ۝٢٦

**பொருள்:**

அவர்கள் தங்களின் (விரிவான பாதுகாப்பு இடமாகிய) குகையில் முந்நூறு வருடங்களும் இதற்கு மேலும் ஒன்பது வருடங்களும் தங்கியிருந்தனர் (என்றும் சிலர் கூறுகின்றனர்).(18:26)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த வசனத்திற்கு விளக்கவுரை வழங்கியவாறு கூறுகின்றார்கள்:

இந்த வசனத்தில் பண்டைய குகை வாசிகளின் துன்பங்களின் காலத்தைக் குறித்துக் கூறப்பட்டுள்ளது. அந்தக் காலம் வரை அவர்கள் மீது அநீதியிழைக்கப்பட்டு வந்தது. மேலும் மீண்டும், மீண்டும் குகைகளில் சென்று ஒளிந்து கொள்ள நேரிட்டது. அல்லாஹ் கூறுகின்றான்: அது முந்நூறு ஆண்டு காலம் ஆகும். வரலாற்றிலிருந்து இந்த விஷயம் உண்மைப்படுத்தப்படுகின்றது. ஏனெனில், இந்த துன்பங்களுக்கான காலம் ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களின் சிலுவையில் அறையப்பட்டதிலிருந்து ஆரம்பமாகின்றது. மேலும், முழுமையான அமைதி கான்ஸ்டன்டாயின் கிறிஸ்தவராக ஆன காலத்தில் கிடைத்தது. ஏற்கனவே எழுதப்பட்டிருந்தது போன்று கான்ஸ்டன்டாயின் கி.பி 337 -ம் ஆண்டு கிறிஸ்தவர் ஆனார். (என்ஸைக்லோ

**இதன் தொடர்ச்சி : 9ம் பக்கம்**

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் டாக்டர் மீர் முஹம்மது இஸ்மாயீல் ஸாஹிப் (ரலி) அவர்களின் மகளும், ஸாஹிப்ஸாதா மிர்ஸா வஸீம் அஹ்மத் ஸாஹிப் மர்ஹூம் அவர்களின் துணைவியாருமான மதிப்பிற்குரிய அமத்துல் குத்தூஸ் ஸாஹிபா அவர்களுடைய நற்குறிப்புகளும் & ஜனாஸா காயிப் தொழுகையும்**

**தற்போது, தனது வாழ்க்கையை அல்லாஹ்வின் திருப்திக்கேற்ப கழிப்பதற்கு முயற்சி செய்த அப்படிப்பட்ட ஒருவரைப் பற்றி நான் எடுத்துரைக்க இருக்கின்றேன். இந்த நற்குறிப்பு என்பது ஹஸ்ரத் டாக்டர் மீர் முஹம்மது இஸ்மாயீல் ஸாஹிப் (ரலி) அவர்களின் மகளும், ஸாஹிப்ஸாதா மிர்ஸா வஸீம் அஹ்மத் ஸாஹிப் மர்ஹூம் அவர்களின் துணைவியாருமான மதிப்பிற்குரிய அமத்துல் குத்தூஸ் ஸாஹிபா அவர்களுடையது ஆகும்.**

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் அன்னாரை காதியான் வழியனுப்பி வைத்தபோது, லஜ்னாவின் ஜமாஅத்தை ஒன்றிணைக்க வேண்டும் என்ற இந்த அறிவுரையையும் வழங்கியிருந்தார்கள். அன்னார் அங்கு சென்றவுடன் முதலில் காதியான் ஜெனரல் செகரட்டரி ஆனார்கள். பின்னர் 1955ல் உள்ளூர் ஸதர் லஜ்னாவாகவும், பின்னர் பாரதத்தின் ஸதர் லஜ்னாவாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். 1959ல் உள்ளூர் ஸதர் லஜ்னாவாக வேறு ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். மேலும், அன்னார் பாரதத்தின் ஸதர் லஜ்னாவாக பணி செய்து வந்தார்கள். அல்லாஹ்வின் அருளினால் 1999 வரை அன்னார் அந்தத் தொண்டினை வகித்து வந்தார்கள். அதன் பிறகு கௌரவ உறுப்பினராக இருந்தார்கள். தான் தொண்டாற்றிய காலத்தில் இந்திய மஜ்லிஸ்களில் சுற்றுப் பயணமும் செய்தார்கள். அன்னார் தொண்டாற்றிய காலம் 46 ஆண்டுகள் ஆகும்.**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 15 செப்டம்பர் 2023** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1402 ஆண்டு **தபூக்** மாதம் **15ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

இந்த உலகிற்கு வருகின்ற மனிதர் அனைவரும் ஒரு காலத்தைக் கழித்துவிட்டு இந்த உலகத்தை விட்டு சென்றுவிட வேண்டும். ஆனால், எந்த மக்களுடைய நல்ல நினைவுகள் மட்டுமே இருக்கின்றனவோ; எவர்கள் மக்களுக்கு நன்மை பயப்பவர்களாக இருக்கின்றனரோ; எவர்கள் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை அளிப்பதற்கான செயல் முன்மாதிரியாக இருக்கின்றனரோ; எவர்கள் அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் கட்டளைகளின்படி அமல் செய்வதற்கு முயற்சி செய்யக் கூடியவர்களாக இருக்கின்றனரோ; எவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் செய்த பைஅத்திற்குரிய உரிமையை செலுத்துவதற்கு முயற்சி செய்யக் கூடியவர்களாக இருக்கின்றரோ; எவர்கள் அஹ்மதிய்யா கிலாஃபத்துடன் உண்மையான நன்றியுணர்வு கொண்டவர்களாக இருக்கின்றனரோ; எவர்கள் அடியார்களுக்குரிய உரிமைகளை செலுத்துவதற்கு இயன்ற வரை முயற்சி செய்யக் கூடியவர்களாக இருக்கின்றனரோ; எவர்கள் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்கு எந்நேரமும் முயற்சி செய்யக் கூடியவர்களாக இருக்கின்றனரோ அவர்கள் (அனைவரும்) நற்பேறு பெற்றவர்களாக இருக்கின்றனர்..

இப்படிப்பட்ட மக்களுக்காக ஒவ்வொருவரின் நாவிலிருந்தும் புகழ்ச்சியான வார்த்தைகளே வெளிவருகின்றன. மேலும், இவ்வாறு அவர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கூற்றிற்கிணங்க சொர்க்கம் கடமையாகிவிடுகின்றது. (ஸஹீஹ் புகாரி, கிதாபுல் ஜனாயிஸ், ஹதீஸ்: 1367)

தற்போது, தனது வாழ்க்கையை அல்லாஹ்வின் திருப்திக்கேற்ப கழிப்பதற்கு முயற்சி செய்த அப்படிப்பட்ட ஒருவரைப் பற்றி நான் எடுத்துரைக்க இருக்கின்றேன். இந்த நற்குறிப்பு என்பது ஹஸ்ரத் டாக்டர் மீர் முஹம்மது இஸ்மாயீல் ஸாஹிப் (ரலி) அவர்களின் மகளும், ஸாஹிப்ஸாதா மிர்ஸா வஸீம் அஹ்மத் ஸாஹிப் மர்ஹூம் அவர்களின் துணைவியாருமான மதிப்பிற்குரிய அமத்துல் குத்தூஸ் ஸாஹிபா அவர்களுடையது ஆகும். அன்னார் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் மருமகளாகவும் இருந்தார்கள். இவர்கள் காதியானில் தான் வசித்து வந்தார்கள் என்றபோதிலும், சில காலத்திற்கு முன்பு ரப்வாவில் தமது மகள்களிடம் வந்திருந்தார்கள். ரப்வாவில் கடந்த நாட்களில் 96-வது வயதில் இறைநியதிக்கேற்ப அன்னார் மரணமடைந்து விட்டார்கள்.

اِنَّا لِلّٰهِ وَاِنَّآ اِلَيْهِ رَاجِعُوْنَ

அல்லாஹ்வின் அருளினால் ஒன்பதில் ஒரு பங்கை வஸிய்யத் செய்திருந்தார்கள். அவர்களின் வாழ்க்கையின் சில நிலைமைகளை நான் எடுத்துரைப்பேன்.

1951-ம் ஆண்டு ஜல்ஸா ஸாலானாவின் துவக்கத்தின்போது ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் மிர்ஸா வஸீம் அஹ்மத் ஸாஹிப் அவர்களுடைய திருமணத்தை இவர்களுடன் நடத்தி வைத்தார்கள். மேலும், கூறினார்கள்: சில நிலைமைகளின் காரணமாக ஜல்ஸா துவங்குவதற்கு முன்னர் நான் இரண்டு நிக்காஹ்விற்கான அறிவிப்பை செய்ய விரும்புகின்றேன்.

ஒன்று இவர்களுடையதாக இருந்தது. மற்றொன்று ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் புதல்வியினுடையதாக இருந்தது.

மேலும் கூறுகின்றார்கள்: நான் இரண்டு நிக்காஹ்வை மட்டும் நடத்துவேன். ஏனெனில் நான் முன்னரே அறிவித்திருந்தால் பின்னர் ஏராளமானவர்களிடமிருந்து நிக்காஹ்விற்கான விண்ணப்பங்கள் வந்துவிடும். ஆனால், தற்போதோ இருக்கின்ற ஜல்ஸாவின் சூழலில் அதிக எண்ணிக்கையிலான நிக்காஹ் அறிவிப்புகள் இடம்பெற்றுவிட்டால் பின்னர் முழு சொற்பொழிவிற்கான நேரமும் சென்று விடும்.

எவ்வாறு இருப்பினும், அந்த ஜல்ஸாவில் அன்னார் (ரலி) இரண்டு நிக்காஹ்வை நடத்தினார்கள். மேலும் அவர்களின் சார்பாக வக்கீலாக அன்னாரின் சிறிய தந்தை வழிச் சகோதரர் ஸய்யிது தாவூத் அஹ்மத் ஸாஹிப் நியமிக்கப்பட்டார்கள்.

மேலும் நான் எனது மகள்களுக்கு வாழ்க்கையை அர்ப்பணித்தவர்களுடனேயே திருமணம் செய்து வைக்கின்றேன் என்றும் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இந்த நிக்காஹ்வின் போது கூறியிருந்தார்கள்:

பீர் முஈயீத்தீன் ஸாஹிப் அவர்களுடன் அமத்துன் நஸீர் ஸாஹிபா அவர்களுக்கு திருமணம் நடைபெற்றிருந்தது. ( குத்பாதே மஹ்மூத், தொகுதி 3, பக்கம் 650 -651)

அன்னாரின் திருமணம் நடந்தபோது ஹஸ்ரத் டாக்டர் மீர் முஹம்மது இஸ்மாயீல் ஸாஹிப்(ரலி) அவர்களின் துணைவியாரின் விண்ணப்பத்தின் படி ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் ருக்ஸ்தானா (எனும் மணப்பெண்ணை மணமகன் வீட்டிற்கு அனுப்பி வைக்கும் நிகழ்வின்) நேரத்தில் மணப்பெண் வீட்டார் சார்பில் கலந்து கொண்டிருந்தார்கள். (அல்ஃபஸ்ல் நாளிதழ் லாஹூர், 26

அக்டோபர், 1952, பக்கம் 3)

தமது மகன் தரப்பிலிருந்து கலந்து கொள்ளவில்லை. மணமகனுடன் ஊர்வலத்தை அழைத்துக் கொண்டு செல்லவில்லை. மாறாக, மணப்பெண் வீட்டார் தரப்பிலிருந்து கலந்து கொண்டார்கள்.

அல்லாஹ் (மர்ஹூமாவாகிய) இவர்களுக்கு மூன்று மகள்களையும், ஒரு மகனையும் வழங்கினான். அன்னாரின் ஒரு மகள் தற்போதைய பாகிஸ்தானின் ஸத்ர் லஜ்னா அமத்துல் அலீம் ஸாஹிபா ஆவார்கள். மன்ஸூர் அஹ்மத் கான் ஸாஹிப் வகீலே ஆஃலா தஹ்ரீகே ஜதீத் அவர்களின் துணைவியார் ஆவார்கள். மற்ற இரண்டு மகள்களில் ஒருவர் கேப்டன் மாஜித் கான் ஸாஹிப் அவர்களின் துணைவியாரான அமத்துல் கரீம் ஸாஹிபா ஆவார்கள். மற்றொருவர் டாக்டர் இப்ராஹீம் முனீப் ஸாஹிப் அவர்களின் துணைவியாரான அமத்துர் ரஊப் ஸாஹிபா ஆவார். அன்னாரின் மகன் மிர்ஸா கலீம் அஹ்மத் அமெரிக்காவில் வசித்து வருகின்றார்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) ஒரு சந்தர்ப்பத்தில் மிர்ஸா வஸீம் அஹ்மத் ஸாஹிப் அவர்களிடம் கூறியிருந்தார்கள். அப்போது அன்னார் திருமணம் தொடர்பாக (ரப்வாவிற்கு) வந்திருந்தார்கள். மேலும், திருமணம் நடந்து அப்போது சில நாட்களே ஆகியிருந்தன. மேலும், தமது மனைவியை அழைத்துக் கொண்டு(காதியான்) செல்வதற்கான ஆவணங்களை தயார் செய்து கொண்டிருந்தார்கள். பாகிஸ்தான் இந்தியாவிற்கிடையிலான தொடர்புகளில் ஏற்ற இறக்கங்கள் இருந்து வருவதைப் போன்று அந்த நாட்களில் எப்படிப்பட்ட பதற்றம் உருவானது என்றால் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

மனைவியின் ஆவணங்கள் தயாராகிக் கொண்டே இருக்கும். நீங்கள் அதனை விட்டு விடுங்கள்; மேலும், உடனடியாக காதியான் திரும்பி சென்று விடுங்கள்; ஏனெனில், அங்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் குடும்பத்தின் ஒரு நபர் இருக்க வேண்டும்.

உடனடியாக விமானத்தில் இருக்கை பதிவு செய்; ஒருவேளை விமானத்தில் இருக்கை கிடைக்கவில்லையென்றாலும் கூட உடனடியாக நீங்கள் (அங்கு) செல்வது அவசியமாகும். சாட்டர்ட் விமானம் புக் செய்து செல்ல நேரிட்டாலும் சரியே.

அன்னார் (ரலி) கூறினார்கள்: ஏனெனில், நீங்கள் அங்கு இல்லையென்றால், மேலும் உங்களது முன்மாதிரியை சமர்பிக்கவில்லையென்றால் மேலும், தியாகம் செய்யவில்லையென்றால் பின்னர் மக்கள் எப்படி தியாகம் செய்வார்கள்?.

எங்கு இந்த தியாகம் மிர்ஸா வஸீம் அஹ்மத் ஸாஹிப் அவர்களுடையதாக இருந்ததோ அங்கு ஸாஹிப்ஸாதி அமத்துல் குத்தூஸ் ஸாஹிபா அவர்களின் தியாகமாகவும் இருந்தது. ஆவணங்கள் எப்போது முழுமையடையும் என்பது தெரியாமல் இருந்தது. நிலைமைகள் பதற்றமானதாக இருந்தன. நிலைமைகள் மேலும் சீர் கெட்டுக் கொண்டே போகிவிடக் கூடாது என்ற சூழல் இருந்தது. ஆயினும், காலத்தின் கலீஃபாவின் கட்டளையாக இருந்தது. எனவே மிகவும் மகிழ்ச்சியுடன் தமது கணவரை வழியனுப்பி வைத்தார்கள். மேலும், உலகை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கினார்கள்.

டாக்டர் ஹஷ்மத்துல்லாஹ் ஸாஹிப் கூறினார்கள்: ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் மிர்ஸா வஸீம் அஹ்மத் ஸாஹிப் அவர்களை வழியனுப்பி வைப்பதற்காக லாஹூர் விமான நிலையத்திற்கு வருகை தந்திருந்தபோது, விமானம் பார்வையிலிருந்து மறைந்து விடும் வரை ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் விமான நிலையத்தில் நின்று கொண்டு தொடர்ந்து விமானத்தைப் பார்த்துக் கொண்டே இருந்தார்கள்; மேலும் துஆ செய்து கொண்டே இருந்தார்கள். பின்னர் திருணம் நடந்து ஓராண்டு கழிந்த பிறகு அவர்களுடைய ஆவணங்கள் முழுமையடைந்தன.

அப்போது அன்னார் கூறினார்கள்:

நான் காதியான் செல்ல இருந்தபோது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் எனக்கு குறிப்பாக இந்த வழிகாட்டலை வழங்கினார்கள்: அதாவது நீங்கள் உம்மே நாஸிர் அவர்களின் வீட்டில் தங்க வேண்டும்.(ஏனெனில்) அங்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பாதங்கள் அதிகமாக பட்டுள்ளன. மேலும், அன்னாருடைய (வீட்டின்) வளாகத்தில் ஹூஸூர் (அலை) அவர்கள் தர்ஸூம் வழங்கியுள்ளார்கள்.

(குத்பாதே மஸ்ரூர், தொகுதி 5, பக்கம் 180 -181, 184- 185)

ஸாஹிப்ஸாதி அமத்துல் குத்தூஸ் ஸாஹிபா காதியான் சென்று ஜமாஅத்தின் பெண்களை ஒன்றுகூட்டுவதிலும், ஒழுங்குபடுத்துவதிலும், தர்வேஷ்களின் மனைவி, பிள்ளைகளுடன் அனுதாபம் செலுத்துவதிலும் மிக முக்கியப் பங்காற்றினார்கள். மேலும், அவர்களின் காரணமாக அங்கிருந்த பெண்களுக்கு பெரும் ஆறுதல் கிடைத்திருந்தது. இது தொடர்பாக அங்குள்ள தர்வேஷ்களின் மனைவிமார்கள் அல்லது மகள்களிடமிருந்து எண்ணற்ற கடிதங்கள் எனக்கு வந்துள்ளன. ஹஸ்ரத் நான்காவது கலீஃபா (ரஹி) அவர்கள் லண்டன் வந்தடைந்த பிறகு, 1984-ம் ஆண்டு மே 4-ம் தேதி முதல் குத்பா ஜுமுஆவை வழங்கினார்கள். மேலும், உலகின் அஹ்மதிகளை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சொற்களில்

مَنْ أَنْصَارِيْٓ إِلَى اللهِ

என்று கூறி விளித்தார்கள். மேலும், இஸ்லாத்தை பரப்புவதற்காக ஒரு விசாலமான திட்டத்தை அறிவித்தார்கள். (குத்பாதே தாஹிர், தொகுதி 3, பக்கம் 232 -233, மே 4,1984)

இதனையும் கூறினார்கள்: இந்த நோக்கங்களை முழுமை செய்வதற்காக ஒரு பெரிய காம்பளக்ஸின் தேவை இருக்கின்றது. இரண்டு புதிய தலைமையகங்களை ஐரோப்பில் கட்டுவதற்கான திட்டம் உள்ளது. ஒன்று இங்கிலாந்திலும், மற்றொன்று ஜெர்மனியிலும்; இதற்கான பணத்தை அல்லாஹ் தனது அருளினால் ஏற்பாடு செய்வான். (குத்பாதே தாஹிர், தொகுதி 3, பக்கம் 264- 266, மே 18- 1984) இதில் பங்கு பெறும்படி மக்களிடம் கூறினார்கள்.

ஆக, காதியானின் லஜ்னாக்கள் ஒரு முறை மீண்டும் உணர்வுப்பூர்வமாக லெப்பைக் என்று கூறி பங்கு பெற்றார்கள். ஸாஹிப்ஸாதி அமத்துல் குத்தூஸ் ஸாஹிபா ஸதர் லஜ்னாவாக இருந்தார்கள்.

அன்னார் தமது அறிக்கையில் இவ்வாறு எழுதினார்கள்: அல்லாஹ்வின் அருளினால் லஜ்னா இமாயில்லாஹ் பாரத் ஹூஸூர் அவர்களின் குரலுக்கு செவிமடுத்தவாறு இந்தத் திட்டத்தில் போட்டிபோட்டுக் கொண்டு பங்கு பெற்றார்கள்.ஆபரணங்கள் மற்றும் ரொக்கம் என்று எவரிடம் என்னவெல்லாம் இருந்ததோ அதனைக் கொடுத்துவிட்டார்கள். அன்னார் சுயமே அனைத்து நகைகளையும் வழங்கிவிட்டார்கள். பாரதத்தின் லஜ்னாவின் சார்பாக முதலில் காதியானின் லஜ்னாவின் வாக்குறுதிகள் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் சமூகத்தில் அனுப்பி வைக்கப்பட்டது. ஆக, ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் ஆகஸ்ட் 10, 1984-ம் ஆண்டு வழங்கிய குத்பாவில் காதியானின் லஜ்னாவைப் பற்றிக் குறிப்பிட்டவாறு கூறினார்கள்:

காதியானின் லஜ்னாவைப் பற்றி எனக்கு அறிக்கை கிடைத்துள்ளது. மேலும், அதற்காக நான் காத்திருந்தேன். (ஏனெனில்) தஹ்ரீகே ஜதீதின் தியாகங்களுக்கான துவக்கம் நிகழ்ந்தபோது காதியானின் பெண்களுக்கு அசாதாரண தியாகங்களை செய்வதற்கு நற்பேறு கிடைத்திருந்தது. தற்போதோ மிகவும் குறைவான பெண்களே எஞ்சியிருக்கின்றனர். ஆயினும், எவ்வளவு பேர் இருந்தாலும் அவர்கள் தொடர்பாகவும் தகவல் கிடைக்க வேண்டும் என்று நான் காத்திருந்தேன். ஏனெனில், அவர்கள் தியாகத்தின் மைதானத்தில் முன்னணியில் இருப்பது அவர்களுக்கான உரிமையாகும். மேலும், காதியானின் பெயரை எவ்வாறு அந்தக் காலத்துப் பெண்கள் உயர்த்தினார்களோ மீண்டும் இன்று அதனை உயர்த்த வேண்டும். எனவே அல்ஹம்துலில்லாஹ் அங்கிருந்து அறிக்கையும் கிடைத்துள்ளது. புதிய தலைமையகத்திற்காக நான் காதியானின் லஜ்னா மற்றும் நாஸிராத் சிறுமிகளுடைய வாக்குறுதிகளை ஹூஸூர் அவர்களின் சமூகத்தில் ஜூலை 16 அன்று எழுதியிருந்தேன் என்று ஸத்ர் லஜ்னா பாரத் அவர்கள் தகவல் கொடுக்கின்றார்கள்.

அன்னார் எழுதியுள்ளார்கள்: ஹூஸூர் அவர்களின் குத்பாக்கள் இங்குள்ள பெண்களிடம் ஒரு துடிப்பை உருவாக்கிவிட்டது. மேலும் அல்லாஹ்வின் அருளினால் மட்டுமே அவர்களிடம் என்னவெல்லாம் இருந்ததோ அவற்றை அவர்கள் கொடுத்து விட்டனர். ஆனால், இன்னும் அவர்களின் தாகம் தணியவில்லை. இன்னும் இருந்தால் இறைவனின் பணிக்காக இன்னும் கொடுத்து விட வேண்டும் என்ற அளவிற்கு அவர்களிடம் கடுமையான துடிப்பு இன்னும் இருக்கின்றது. (குத்பாதே தாஹிர், தொகுதி 3, பக்கம் 434, குத்பா ஜூமுஆ, ஆகஸ்ட் 10, 1984)

இந்தக் கடிதம் ஸாஹிப்ஸாதி அமத்துல் குத்தூஸ் ஸாஹிபா அவர்கள் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களுக்கு எழுதிய கடிதமாக இருந்தது. 1991-ல் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் இந்தியாவிற்கு சென்றிருந்தபோது; காதியான் சென்றிருந்தபோது அன்னார் (ரஹி) கூறினார்கள்: இறைவனின் அருளினால் இந்தியாவின் பெண்களில் அனைத்து லஜ்னாப் பெண்மணிகளைக் குறித்து என்னால் கூறமுடியாது என்றபோதிலும் காதியானின் லஜ்னாவைக் குறித்து என்னால் கூற முடியும். இவர் பொருள் தியாகத்தில் தன்னிகரற்ற முன்மாதிரிகளை காட்டக் கூடியவர் ஆவார். காதியானின் ஜமாஅத்

மிகவும் ஏழையான ஒரு ஜமாஅத் ஆகும். ஆனால், நான் எப்போதும் பார்த்துள்ளேன்; எந்தவொரு திட்டம் அறிவிக்கப்பட்டாலும் இங்குள்ள பெண்களும் சிறுமிகளும் எப்படிப்பட்ட பற்றுடனும், உத்வேகத்துடனும் அதில் பங்கேற்கின்றனர் என்றால் சிலமுறை எனது உள்ளம் இவ்வாறு விரும்புகின்றது. அதாவது நிறுத்துங்கள்! உங்களிடம் இந்த அளவு ஆற்றல் இல்லை என்று கூறி அவர்களை தடுத்துவிட வேண்டும் என்று எனது உள்ளம் விரும்புகின்றது. மேலும், உண்மையிலேயே எனக்கு மகிழ்ச்சி ஏற்பட்டாலும் அதனுடன் அவர்களைக் குறித்த கவலையும் ஏற்பட்டுவிடுகின்றது. ஆனால் பின்னர் நான் சிந்திக்கின்றேன். எவருக்காக அவர்கள் தியாகம் செய்கின்றனரோ அவன் அவர்களுக்கு எவ்வாறு அதிகரித்துக் கொடுக்க வேண்டும் என்பதை அறிகின்றான். அதே அல்லாஹ் தனது அருளினால் அவர்களின் எதிர்காலத்தை மார்க்கம் மற்றும் உலகத்தின் செல்வங்களால் நிறைத்துவிடுவான்.

அடுத்து, அன்னார் (ரஹி) கூறினார்கள்: ஒரு சந்தர்ப்பத்தில் நான் தலைமையகத்திற்கான திட்டத்தை கூறியபோது அஹ்மதி சிறுமிகள் சிறிது சிறிதாக சேமித்து வைத்திருந்த பைசாவை மார்க்கத்திற்காக கொடுத்து விட்டனர்.

பின்னர் கூறினார்கள்: நமது இறைவனும் எவ்வளவு கருணையாளன் ஆவான்! எவ்வளவு மகத்துவ மிக்கவன் ஆவான்! சிலமுறை அன்பும், உத்வேகமும் இன்றி கோடிகளை அவனது பாதங்களில் வைத்தாலும் அவன் அதனை நிராகரித்து விடுகின்றான். அதனை சீண்டுவது கூட கிடையாது. அதற்கு எந்த மதிப்பும் கிடையாது.ஆயினும், தூயவரும் மற்றும் ஏழையுமான ஒருவர் அன்புடனும் நேசத்துடனும் தனது சிறிய சேமிப்பை வழங்கினால் பின்னர் அதனை அல்லாஹ் அன்பு மற்றும் நேசத்துடன் ஒப்புக் கொள்கின்றான். நீங்கள் உங்களுடைய நேசம் கொள்ளக் கூடியவர்களை, அன்பர்களின் அன்பளிப்புகளை பெற்றுக் கொண்டு முத்தமிடுவது போன்று இறைவனுக்கும் முத்தமிடுவதற்கு சில வடிவங்கள் இருக்கின்றன. மேலும், நான் அறிவேன். மேலும், நம்புகின்றேன். அதாவது, இந்த பொருள்களின் அடிப்படையில் இறைவன் இந்த சில பைசாக்களை நிச்சயம் முத்தமிடுவான்.

(நூல்- ஹவ்வா கி பேட்டியான், பக்கம் 87-88, காதியான் ஜல்ஸா ஸாலானாவில் ஆற்றிய பெண்களுக்கான சொற்பொழிவு- டிசம்பர் 27,1991)

இது அன்னார் (ரலி) ஜல்ஸாவில் லஜ்னாக்களுக்கு ஆற்றியிருந்த சொற்பொழிவின் ஒரு மேற்கோள் ஆகும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் அன்னாரை காதியான் வழியனுப்பி வைத்தபோது,லஜ்னாவின் ஜமாஅத்துகளை ஒன்றிணைக்க வேண்டும் என்ற இந்த அறிவுரையையும் வழங்கியிருந்தார்கள். அன்னார் அங்கு சென்றவுடன் முதலில் காதியான் ஜெனரல் செகரட்டரி ஆனார்கள். பின்னர் 1955-ல் உள்ளூர் ஸத்ர் லஜ்னாவாகவும், பின்னர் பாரதத்தின் ஸத்ர் லஜ்னாவாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். 1959-ல் உள்ளூர் ஸத்ர் லஜ்னாவாக வேறு ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். மேலும், அன்னார் பாரதத்தின் ஸத்ர் லஜ்னாவாக பணி செய்து வந்தார்கள்.அல்லாஹ்வின் அருளினால் 1999 வரை அந்தத் தொண்டினை வகித்து வந்தார்கள். அதன் பிறகு கௌரவ உறுப்பினராக இருந்தார்கள். தான் தொண்டாற்றிய காலத்தில் இந்திய மஜ்லிஸ்களில் சுற்றுப் பயணமும் செய்தார்கள். அன்னார் தொண்டாற்றியக் காலம் 46 ஆண்டுகள் ஆகும். லஜ்னாவின் பணியை ஒழுங்குப்படுத்துவதில் துவக்கத்தில் மிகவும் அதிகமான கடினங்கள் சந்திக்க நேரிட்டது. கடிதங்கள் எழுதுவார்கள் ஆயினும் பதில் வராமல் இருந்தது. பின்னர் ஸாஹிப்ஸாதா மிர்ஸா வஸீம் அஹ்மத் ஸாஹிப் அவர்களின் பெயரில் ஒரு முகவரி கொடுக்கப்பட்டது. இவ்வாறு மெதுமெதுவாக அன்னார் ஜமாஅத்துகளை ஒன்றுபடுத்த துவங்கினார்கள். இந்தியாவில் ஏராளமான உள்ளூர் மொழிகள் இருக்கின்றன. மற்றொரு சிக்கல் இதுவாகவும் இருந்தது. அதாவது, உள்ளூர் மொழிகளில் கடிதங்கள் கிடைத்து வந்தன. ஆக, முஅல்லிம்கள் மூலமாக அவற்றின் மொழியாக்கம் செய்யப்பட்டு வந்தன. பின்னர் மெது மெதுவாக ஹஸ்ரத் ஸாஹிப்ஸாதா மிர்ஸா வஸீம் அஹ்மத் ஸாஹிப் அவர்களுடன் இணைந்து வெளியூர் ஜமாஅத்துகளில் சுற்றுப் பயணமும் செய்யத் துவங்கினார்கள். மேலும், இவ்வாறு (இந்திய, பாகிஸ்தான்) பிரிவினைக்குப் பிறகு எந்த ஜமாஅத்துகளுக்கு மிக அதிகமான உதவிக்கான தேவை இருந்ததோ, ஒழுங்குப்படுத்துவதற்கான அவசியம் இருந்ததோ அவற்றை ஒழுங்குபடுத்தினார்கள்.

அடுத்து, இதேபோன்று அன்னாரின் மகள் அமத்துல் அலீம் ஸாஹிபா எழுதுகின்றார்கள்: நான்காவது கிலாஃபத்திற்குப் பிறகு பாரதத்திலிருந்து கிடைக்கக் கூடிய துஆக்களுக்கான கடிதங்களின் சுருக்கத்தை தயார் செய்வதற்கு அன்னார் ஒரு குழுவினரை உருவாக்கியிருந்தார்கள். மேலும், ஹுஸுர் (ரஹி) அவர்களுக்கு அவற்றின் சுருக்கம் எழுதப்பட்டு வந்தது. அதனால் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் மிகவும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள். திருக்குர்ஆனிற்கு மிக அதிகமாக தொண்டாற்றியுள்ளார்கள். காதியானின் 250-க்கும் மேற்பட்ட சிறுமிகளுக்கு திருக்குர்ஆன் ஓதிக் கொடுத்தார்கள்; கற்றுக் கொடுத்தார்கள். பள்ளிக் கூடப் பிள்ளைகள் முதலில் காலையிலேயே வந்து விடுவார்கள். பின்னர் மதியவேளையில் வருவார்கள். பல குழுக்களாக வருவார்கள்.

பாரதத்தில் எந்த பெண் பிள்ளைகள் எஃப் ஏ அல்லது எஃப் எஸ் ஸி படித்தார்களோ அவர்கள் கல்வி பயிலும் நிலையில் இடைவேளை கிடைக்கும்போது மூன்று, மூன்று மாதங்கள் காதியானில் வந்து தங்கி வந்தார்கள்.

அன்னாரின் மகள் கூறுகின்றார்கள்: எங்களது தாயார் அவர்களுக்கு காலையிலும், மதிய வேளையிலும், மாலையிலும் திருக்குர்ஆன் மொழியாக்கத்தை கற்றுக் கொடுத்தார்கள்.

லஜ்னாக்களின் அமைப்பை மிகவும் கட்டமைத்தார்கள். மிகவும் கடின உழைப்புடன் அன்னார் பணியைக் கற்றுக் கொடுத்தார்கள். கிலாஃபத்துடனான தொடர்பை சம்பவங்களின் வடிவில் கூறி அறிவுரை செய்து வந்தார்கள். அன்னார் சம்பவங்களை எடுத்துரைத்து வந்தபோது அதன் மூலம் சிறுமிகளுக்கும், பெண்களுக்கும் கிலாஃபத்துடன் தொடர்பு அதிகரித்து வந்தது. அசாதாரண நற்பண்பு என்பது விருந்து உபசரிப்பாக இருந்தது.

அன்னாரின் மகள் கூறுகின்றார்: எங்களது தந்தையாருக்கு எப்போதும் உதவி செய்து வந்தார்கள். மிகவும் ஏழ்மையான நிலைமைகள் இருந்தன. மதியத்திற்கு வெறும் நிலக்கடலை பருப்பு மட்டுமே இருந்து வந்தது. மேலும், தந்தையார் பாலுக்காக மட்டும் ஒரு எருமை மாட்டை வைத்திருந்தார்கள். விருந்தினர் யாராவது வந்தால் (வீட்டில்) என்ன உணவு இருந்ததோ;எது சமைக்கப்பட்டிருக்குமோ அதனை தயக்கமின்றி அவர்களுக்கு கொடுத்து விடுவார்கள். விருந்தினர் எவர் வந்தாலும் அவருக்கு காலநிலைக்கு ஏற்ப சர்பத் மற்றும் தேனீரையும் கொடுத்து வந்தார்கள். பிற்காலத்தில் செழிப்பு ஏற்பட்ட போது அதே ரீதியில் உணவு வழங்கி வந்தார்கள். மக்கள் தமது வீடாக நினைத்து அன்னாரிடம் வருவார்கள். ஒரு நல்ல மனைவியாக இருந்தார்கள்; எப்போதும் உதவி செய்யக் கூடிய, கடினமான நேரத்தில் உடன் நிற்கக் கூடிய பெண்மணியாக இருந்தார்கள். ஒருபோதும் எந்த பொருளையும் டிமாண்ட் செய்யவில்லை. அன்னாரின் கணவரின் புறமிருந்து அதாவது மியான் வஸீம் அஹ்மத் ஸாஹிப் அவர்களின் சார்பாக எது கிடைத்து வந்ததோ அதைக் கொண்டே வாழ்வை கழித்து வந்தார்கள். மேலும், அல்லாஹ் அசாதாரண அருளையும் அதில் வழங்கினான். சுத்தத்தை விரும்பக்கூடிய மற்றும் ஒழுங்கமைப்பான வழிமுறைகளை கொண்ட பெண்மணியாகவும் இருந்தார்கள்.

அன்னாரின் மகள் கூறுகின்றார்கள்: மிர்ஸா வஸீம் அஹ்மத் ஸாஹிப் அவர்களின் மரணம் நிகழ்ந்தபோது அன்னார் கனவில் இவ்வாறு பார்த்தார்கள். அதாவது, ஒருவகையில் அன்னார் இறுதிப் பயணத்தில் சென்று கொண்டிருக்கின்றார்கள். அன்னாரும் ஆயத்தம் செய்து கொண்டிருக்கின்றார்கள்.அப்போது ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் அன்னாரின் கனவில் வந்தார்கள். மேலும், இன்னும் உனக்கு விசா கிடைக்கவில்லை என்று கூறினார்கள். ஆக, அல்லாஹ்வின் அருளினால் இந்தக் கனவிற்கு பிறகு அன்னார் நீண்ட வாழ்வைப் பெற்றார்கள்; கழித்தார்கள்.

2007-ம் ஆண்டில் மிர்ஸா வஸீம் அஹ்மத் ஸாஹிப் நோயுற்று இருந்தார்கள். மேலும், பின்னர் அல்லாஹ் அன்னாருக்கு குணமளித்து விட்டான். அப்போது குணம் பெற்ற பிறகு, அன்னார் ஹைதராபாத் ஜமாஅத்துகளின் சுற்றுப் பயணத்திற்கான நிகழ்ச்சியை உருவாக்கினார்கள். மேலும், தமது மனைவியை உடன் அழைத்துச் சென்றார்கள். அங்கு அமத்துல் குத்தூஸ் ஸாஹிபா ஒரு கனவு பார்த்தார்கள். அச்சமூட்டும் கனவாக இருந்தது. அதாவது மிர்ஸா வஸீம் அஹ்மத் ஸாஹிப் அவர்களுக்கு அது இறுதி நேரம் ஆகும் என்று கனவு பார்த்தார்கள். ஆனால், அந்நேரத்தில் அன்னார் மிகவும் ஆரோக்கியமாக இருந்தார்கள். ஆயினும், எவ்வாறு இருப்பினும் காதியான் திரும்பி செல்லுவோம் என்று அன்னார் வலியுறுத்தினார்கள். காதியான் சென்றவுடனேயே அன்னார் மீண்டும் நோய்வாய்ப்பட்டார்கள். மேலும் அதே நோயில் அன்னாரின் மரணமும் நிகழ்ந்துவிட்டது.

ஆயுளின் இறுதியில் அன்னாருக்கு பார்வை பறிபோய் இருந்தது. மேலும், கருவி மூலமே செவிப்புலனும் இருந்து வந்தது. கேட்கும் திறனும் தீர்ந்திருந்தது. ஆயினும் மிகவும் மகிழ்ச்சியுடன் வாழ்வை கழித்தார்கள். ஒருபோதும் நன்றிகேடு

செய்யவில்லை. உடல்நலம் குறித்து விசாரிக்கப்பட்டபோதெல்லாம் எப்போதும், ஒவ்வொரு முறையும் அல்ஹம்துலில்லாஹ் என்று கூறிவந்தார்கள். நான் கூறியது போன்று தலைமையகம் கட்டுவதற்கான திட்டத்தின்போதும் அன்னாரிடம் இருந்த நகைகளை அன்னார் உடனடியாக கொடுத்து விட்டார்கள். காலத்தின் கலீஃபாவின் புறமிருந்து என்ன திட்டம் அறிவிக்கப்பட்டாலும் காதியானில் முதல் சந்தா மிர்ஸா வஸீம் அஹ்மத் ஸாஹிப் மற்றும் அன்னாரின் மனைவியின் சார்பாக இருந்து வந்தது.

அன்னாரின் மகள் கூறுகின்றார்கள்: நாங்கள் திருக்குர்ஆன் ஓதுவதில் ஏதாவது தவறு செய்யும்போது எங்கள் தாயார் வேறோர் அறையில் இருந்தாலும் அங்கிருந்தே எங்களது தவறுகளை சரிசெய்து வந்தார்கள். அன்னார் திருக்குர்ஆனை மனனம் செய்திருக்கின்றார்கள் என்பது போன்று நாங்கள் உணர்ந்து வந்தோம். ஆனால், அன்னார் திருக்குர்ஆனை மனனம் செய்தவராக இருக்கவில்லை. ஆயினும், அதிகமாக திருக்குர்ஆன் திலாவத் செய்ததன் காரணமாக அன்னாருக்கு மனனம் ஆகியிருந்தது. மிர்ஸா வஸீம் அஹ்மத் ஸாஹிப் இஃதிகாஃபில் இருந்து வந்தபோது, அன்னாருக்கு உணவு அனுப்பி வந்தார்கள். மேலும் அத்துடன் இஃதிகாஃபில் இருந்து வந்த ஏழைகளுக்கும் உணவு அனுப்பி வந்தார்கள். இதேபோன்று போர்டிங்கில் இருந்த மாணவர்களுக்கும், முஅல்லிம்களுக்கும் உணவு அனுப்பி வந்தார்கள். இதேபோன்று மக்களை எந்த அளவிற்கு கருத்தில் கொண்டிருந்தார்கள் என்றால் அன்னார் நோய்வாய்பட்டிருந்தாலும், காய்ச்சல் இருந்தாலும், என்ன நிலைமையாக இருந்தாலும், ஏதாவது சுக, துக்கங்களில் செல்ல வேண்டியிருந்தால் கண்டிப்பாக சென்றுவிடுவார்கள். காதியானில் பல்வேறுதரப்பட்ட பிரிவு மக்கள் இருந்தனர். அவர்களின் பெண் பிள்ளைகளுக்கு தையல் கற்றுக் கொடுத்தார்கள்; மணப்பெண்களை அலங்கரித்து வந்தார்கள். அனைவரும் ஒருவர் மற்றவருடன் இணைந்து வாழக்கூடிய ஒரு கலாச்சாரத்தை அன்னார் உருவாக்கியிருந்தார்கள். ரப்வாவில் 2005-ம் ஆண்டு ஸிராயே மஸ்ரூர் கட்டடம் கட்டப்பட்டது. மிகவும் பெரிய கட்டடம் ஆகும். ஆக அங்கேயும் தம் சார்பாக சந்தா கொடுப்பதற்கு பகரமாக தமது கணவரின் சார்பாக ஒரு லட்சம் ரூபாய் தொகை கொடுத்தார்கள்.

அடுத்து கூறுகின்றார்கள்: (இந்திய, பாகிஸ்தான்) பிரிவினைக்குப் பிறகு லாஹூர் ரத்தன் பாகிலும், ரப்வாவிலும் ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களுக்கு திருக்குர்ஆன் ஓதி செவிமடுக்கச் செய்து வந்தார்கள். மேலும் இதேபோன்று கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் யாரிடம் இருந்தாவது மல்ஃபூஸாத்தையும் வாசிக்கச் செய்து கேட்டு வந்தார்கள். அதனையும் வாசித்துக் காட்டுவதற்கும் அன்னாருக்கு வாய்ப்பு கிடைத்தது.

அன்னாரின் சிறிய மகள் அமத்துர் ரஊஃப் கூறுகின்றார்கள்: (இந்திய, பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு) பைத்துர் ரியாஸத்தில் ஷாஹ்ஜியும், சிவப்பு மைத்துளிகள் விழுந்த அறையில் அத்தருத்தீன் ஸாஹிபும், ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களுடைய பெரிய அறையில் ஹாஃபிழ் ஸாஹிப் அவர்களும் தங்கியிருந்தார்கள். இந்த மூன்று நபர்கள் இருந்தார்கள். பின்னர் பாயி அப்துர் ரஹீம் ஸாஹிப் அவர்களும் இங்கு வசித்து வந்தார்கள்.

ஆக கூறுகின்றார்கள்: வீட்டில் என்ன உணவு சமைக்கப்படுமோ அந்த உணவை அவர்கள் அனைவருக்கும் அனுப்பி வைத்து வந்தார்கள். மேலும், பைதுத் துஆவிற்குரிய நேரத்தில் அங்கு பெண்கள் வருவதற்கான நேரம் இருந்தது. அதன் பிறகு பெண்கள் வீட்டிற்கு வந்துவிடுவார்கள். வீடு எல்லாநேரமும் திறந்திருந்தது. எந்தக் கட்டுப்பாடும் இல்லாமல் இருந்தது. எந்த மணியும் இருக்கவில்லை. மிக எளிதாக வீட்டினுள் நுழைந்து வந்து விடுவார்கள்.

பின்னர் இவர்கள் கூறுகின்றார்கள்: மிர்ஸா வஸீம் அஹ்மத் ஸாஹிப் அவர்களின் மரணம் நிகழ்ந்துவிட்டபோதும், இனாம் கௌரி ஸாஹிப் நாஸிர் ஆஃலா ஆனபோதும் தாயார் அவர்கள், அன்னாருக்கு முழுமையாக கட்டுப்படுதலை வெளிப்படுத்தினார்கள். மேலும், ஒவ்வொரு பணிக்கும் உரிய வழிமுறையின் படி விண்ணப்பம் கொடுத்து வந்தார்கள். அன்னார் தமது வஸிய்யத் சந்தாவையும், ஹிஸ்ஸா ஜாயிதாதையும் தமது வாழ்க்கையிலேயே வழங்கிவிட்டார்கள். மேலும் இதேபோன்று தஹ்ரீகே ஜதீதுடைய முதல் பதிவேட்டில் அன்னார் கலந்து கொண்டிருந்தார்கள்.

பின்னர் தொழுகையை முதன்மையான நேரத்தில் தொழுது விடுங்கள். ஏனெனில், எல்லாவற்றையும் விட முதலில் தொழுகையைப் பற்றிய கணக்கே கேட்கப்படும். அது சரியானதாக இருந்தால் அனைத்தும் சரியானதாக இருக்கும் என்று தமது பெண் பிள்ளைகளுக்கு; பிள்ளைகளுக்கு இந்த அறிவுரையை செய்து வந்தார்கள்.

பின்னர் கூறுகின்றார்கள்: தொடர்ச்சியாக பல பெண் பிள்ளைகளை அன்னார் பராமரித்து வந்தார்கள். அவர்களை மிக நல்ல முறையில் மட்டும் பராமரிக்கவில்லை மாறாக, அவர்களுக்கு தர்பிய்த்தும் வழங்கினார்கள். முதலில் அவர்களுக்கு திருக்குர்ஆன் ஓதுவதற்கு கற்றுக் கொடுத்தார்கள். பின்னர் மொழியாக்கமும் கற்பித்தார்கள். பின்னர் அவர்களுக்கு திருமணமும் செய்து வைத்தார்கள். ராஞ்சி, பீகாரைச் சேர்ந்த ஒரு நபர் தனது மகளுடன் அஹ்மதி ஆகியிருந்தார். மிகவும் வயதானவராக இருந்தார். தனது மகளை எங்களது தாயாரிடம் அழைத்து வந்தார். மேலும், அவர் கூறினார்: நான் எவ்வளவு காலம் உயிருடன் இருப்பேன் என்று தெரியாது;எனக்கு பிறகு இந்த பிள்ளையின் சகோதரர்கள் இவளை கொன்று விடுவார்கள்; எனவே நீங்கள் உங்களிடத்திலேயே இவளை வைத்துக் கொள்ளுங்கள். அப்போது அந்தப் பெண்ணின் வயது சுமார் 25 ஆக இருந்தது.

கூறுகின்றார்கள்: அந்தப் பெண் மொழியும் அறியாதவராக இருந்தபோதிலும் எனது தாயார் அந்த வயதில் அவருக்கு திருக்குர்ஆன் ஓதக் கற்றுக் கொடுத்தார்கள். பின்னர் மொழியாக்கம் கற்பித்தார்கள். பிறகு அவருக்கு திருமணமும் செய்து வைத்தார்கள்.

தர்வேஷிய காலத்தில் பொருளாதார நிலைமைகள் மோசமானதாக இருந்தன. ஒரு தர்வேஷுடைய மகளின் திருமணம் நடக்கும்போது அவருக்கு தனது நகையை கொடுத்து விட்டு வருவார்கள். மேலும், உமது உள்ளம் விரும்பும் வரை இதனை நீ அணிந்து கொள்; பின்னர் திருப்பிக் கொடுத்து விடு என்று கூறிவிட்டு வந்துவிடுவார்கள். பின்னர் அது அடுத்த தர்வேஷுடைய மகளின் திருமணத்தின்போது அவருக்கு கொடுக்கப்பட்டு வந்தது. இவ்வாறு ஏராளமான பெண் பிள்ளைகள் அன்னாருடைய ஆபரணங்களிலிருந்து பயனடைந்து வந்தார்கள். ஏனெனில், தர்வேஷிய காலத்தின் ஆரம்பத்தில் தர்வேஷ்களின் நிலைமைகளும் அவ்வளவு நல்லதாக இருக்கவில்லை. ஆனால், பின்னர் பிள்ளைகள் வெளிநாடுகளுக்கு சென்றனர். பின்னர் பணமும் வரத் தொடங்கியது.

பிள்ளைகள் பெரியவர்களாகினர்; சம்பாதிக்கவும் துவங்கினர். அப்போது சில சேமிப்புகளும் இருந்துவந்தன. அந்நேரத்தில் அவை தங்களது வீடுகளில் பாதுகாப்பற்றதாக உள்ளது என அவர்கள் கருதி வந்ததன் காரணத்தால் மர்ஹூமா அவர்களிடம் அமானிதமாக வைத்து வந்தார்கள்.

இவர்கள் கூறுகின்றார்கள்: எங்களது தாயார் அலமாரியில் அனைத்து அமானிதங்களையும் வைத்து வந்தார்கள். ஒருவருடைய நகைகள் இருக்கும். வேறு ஒருவருடைய பணம் இருக்கும். வேறு சிலவை இருக்கும். எண்ணற்ற அமானிதங்கள் இருக்கும்.

கூறுகின்றார்கள்: நான் பார்த்துள்ளேன். அன்னாரிடம் அமானிதங்களைப் பெற்றுச் செல்வதற்காக எவர் வந்தாலும், அலமாரியில் இன்ன இடத்தில் இருந்து எடுத்துக் கொண்டு வாருங்கள் என்று என்னிடம் கூறுவார்கள். எனவே எவரிடம் அமானிதத்தை திருப்பிக் கொடுப்பார்களோ அவரிடம், முதலில் எனக்கு முன்னால் அதனை திறந்து காட்டுங்கள்; உங்களது அனைத்து பொருட்களும் முழுமையாக இருக்கின்றனவா என்று பாருங்கள்! எனக் கூறுவார்கள். ஆம்! முழுமையாக இருக்கின்றது என்று அந்தப் பெண் கூறும்போதுதான் அன்னார் நிம்மதியடைவார்கள்.

ஆக, எவ்வாறு இருப்பினும் அக்காலத்தில் ஏழ்மை இருந்தது.ஆயினும், எல்லா தர்வேஷுகளும் நல்ல குடும்பங்களுடன் இருந்தனர். (தர்வேஷ்களாகிய) அவர்களின் பெண் பிள்ளைகள் துவக்கக் கல்வியைக் கற்று பின்னர் உயர் கல்வி பயில்கின்றனர் என்றால் சரி! இல்லையென்றால் அன்னார் அவர்களை லஜ்னா அலுவலகத்திற்கு அழைத்து வந்தார்கள். அவர்களைக் கொண்டு லஜ்னாவின் பணிகளை செய்ய வைப்பார்கள். அவர்கள் வீணாக அமரக் கூடாது என்பது மர்ஹூமாவின் முயற்சியாக இருந்து வந்தது. திருமணம் ஆகும் வரை லஜ்னாவின் பணிகளை செய்யுங்கள் என்று கூறிவிடுவார்கள். அடுத்து, அலுவலகம் என்று முறையாக எதுவும் இல்லாமல் இருந்தது. எனவே வீட்டில் சிறிய அலுவலகத்தை உருவாக்கி வைத்திருந்தார்கள். மேலும், அதிலேயே பள்ளிக் கூடத்தின் பணியும் நடைபெற்று வந்தது.மிகவும் நெரிசல் இருந்து வந்தது. ஆயினும், மகிழ்ச்சியுடன் அனைத்து பணிகளையும் செய்து வந்து கொண்டிருந்தார்கள். பின்னர் பணிகள் செய்வதற்காக வந்த பெண் பிள்ளையர்களுக்கு விருந்து உபசரிப்பு போன்றவற்றையும் செய்து வந்தார்கள். உணவுக்கான நேரமாக இருந்தால் உணவு இல்லாதபட்சத்தில் தேனீர் போன்றவற்றை பருகச் செய்து வந்தார்கள். இதேபோன்று உணவு மேசைகளை எவ்வாறு அலங்கரிக்க வேண்டும் என்று அந்தப் பெண்

பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுத்தும் வந்தார்கள். மேலும் இதேபோன்று சிலரிடம் இவ்வாறு கூறிவந்தார்கள். அதாவது இன்று கற்றுக் கொள்ளுங்கள்; இல்லையெனில், பெரிய குடும்பங்களில் உங்களுக்கு திருமணம் நடந்தால் எவராவது உங்களை அறிவீனர் என்று கூறிவிடக் கூடும்.

ஆக, அன்னாருக்கு பெண் பிள்ளைகளைக் குறித்து இவ்வளவு கவலை இருந்தது. மேலும், பெரிய குடும்பங்களில் பெண் பிள்ளைகளின் திருமணம் நடந்தபோது அவர்களுக்கு அன்னாரின் தர்பியத்தின் காரணமாக எந்த கஷ்டமும் ஏற்படவில்லை. நாங்கள் இவ்வாறு அன்னாரிடமிருந்து தர்பிய்யத் பெற்றோம்; மேலும், இதன் காரணமாக மாமனார் வீட்டில் அட்ஜெஸ்ட்மென்ட்டில் ஒருபோதும் எந்த கஷ்டமும் ஏற்படவில்லை. இதேபோன்று ஏராளமான பெண் பிள்ளைகளுக்கு தமது கரத்தால் சீதனம் கொடுத்து வந்தார்கள்.

ஈத் நாட்களில் தர்வேஷ்களின் மனைவிமார்களின் வீட்டிற்கு ஈதீ கொடுப்பதற்காக நேரடியாக செல்வார்கள். மிர்ஸா வஸீம் அஹ்மத் ஸாஹிப் அவர்களும் உடன் இருப்பார்கள். ஒருவேளை சிலமுறை அன்னார் உடன் இல்லையென்றாலும் இவர்கள் சுயமே தனியாக சென்றுவிடுவார்கள்.

இன்ன நபர் ரப்வாவில் மிகப் உயர்ந்த வீட்டைக் கட்டியுள்ளார் என்று ஒருவர் அன்னாரின் முன்னிலையில் குறிப்பிட்டார். அன்னாரின் மகள் கூறுகின்றார்: எனது தாயார் அப்போது கூறினார்கள்: நான் அல்லாஹ்விடம் ஒரு விஷயத்தைக் கூறினேன்.அதாவது எனக்கு காதியானில் இந்த அருளுக்குரிய வீடு கிடைத்துள்ளது. அதாவது இங்கு வசிப்பதற்கு நற்பேறு கிடைத்துள்ளது. மேலும், இங்கு ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் மருமகளாக வந்துள்ளேன். எனக்கு இதுவே அதிகம் ஆகும். ஆயினும், சொர்க்கத்தில் எனக்கு நிச்சயமாக மிக உயர்ந்த வீட்டை வழங்குவாயாக என்று கூறினார்கள்.

இதுதான் நம்பிக்கைக் கொண்டவர்களின் சிறப்பாகும்; மேலும் உலக விஷயங்களிலிருந்து தேவையற்றவராக இருப்பது ஆகும்.

ஹஸ்ரத் மீர் முஹம்மது இஸ்மாயீல் ஸாஹிப் (ரலி) அவர்களைக் குறித்து அன்னார் எழுதினார்கள்: நான் குழந்தைப் பருவம் முதலே தூய்மையை விரும்பக் கூடியவளாக இருந்தேன். எனவே மீர் ஸாஹிப் அவர்கள் என்னை தவிர தமது அறையை சுத்தம் செய்கின்ற பணிக்கு வேறு எவருக்கும் அனுமதி கொடுக்க மாட்டார்கள். ஏனெனில் நோட்ஸ், புத்தகங்கள், காகிதங்கள் என என்னவெல்லாம் அவர்களுடைய பொருட்கள் எங்கெங்கெல்லாம் இருந்தனவோ அவற்றை சுத்தம் செய்து அங்கேயே நான் வைத்து விடுவேன். எனவே அமத்துல் குத்தூஸை தவிர வேறு எவரும் எனது அறையினுள் வரக் கூடாது என்று அன்னார் கூறியிருந்தார்கள்.

சில பெண் பிள்ளைகள் அப்துர் ரஹ்மான் ஸாஹிப் ஜட் அவர்களிடமிருந்தும் திருக்குர்ஆன் கற்று வந்தார்கள். பின்னர் பத்தாம் வகுப்பு தேர்வு எழுதி வந்த பெண் பிள்ளைகளிடம் அன்னார் திருக்குர்ஆன் மொழியாக்கத்தை கற்பிக்கத் துவங்கி விட்டார்களா? என்று கேட்டு வந்தார்கள்.

கூறுகின்றார்கள்: எந்த பெண் பிள்ளைகள் பத்தாம் வகுப்பு தேர்ச்சிப் பெற்று வெளியேறினார்களோ அவர்கள் எங்களது தாயாரிடம் வந்து மொழியாக்கம் கற்று வந்தார்கள். ஒருநேரத்தில் மூன்று வகுப்புகள் நடந்து கொண்டிருந்தன. மேலும், மூன்று ஆண்டுகளுக்குள் அவர்களுக்கு திருக்குர்ஆன் மொழியாக்கத்தை கற்பித்து வந்தார்கள். மேலும்,அத்துடன் இலக்கணத்தையும் கூறிவந்தார்கள். எங்களுக்கு ஃபிக்கா போன்றவற்றையும் கற்றுக் கொடுத்து வந்தார்கள் என்று ஏராளமான மக்கள், சிறுமிகள், பெண்கள் எனக்கு எழுதியுள்ளனர்.

திருக்குர்ஆன் திலாவத்தை முழுமை செய்ய வேண்டும் என்று கண்டிப்பாக கூறப்பட்டு வந்தது. எனவே எந்தவொரு சிறுமியும் தம்மிடமிருந்து திருக்குர்ஆனை முடிக்காமல் செல்லக் கூடாது என்ற ஓர் ஆர்வம் அன்னாரிடம் இருந்து வந்தது. தஹஜ்ஜுத் தொழுகையை மிகவும் பேணி வந்தார்கள். இறுதி நோயில், அதாவது மிக அதிகமாக நோய்வாய்பட்டிருந்தபோதும் தஹஜ்ஜுத்திற்காக தன்னை எழுப்ப வேண்டும் என்ற எண்ணமே அன்னாரிடம் இருந்தது. நோன்பு வைப்பதற்கு ஆற்றல் இருந்த வரை நோன்பு நோற்று வந்தார்கள். தராவீஹ் தொழுகைக்காக தொடர்ந்து மஸ்ஜிதிற்கு சென்று வந்தார்கள். காதியானில் மற்ற நாட்களில் வீட்டில் தொழுது வந்தார்கள். ஆனால், ரமலானில் குறிப்பாக தொழுகைக்காக மஸ்ஜிதிற்கு சென்று வந்தார்கள்.

கிலாஃபத்துடன் எல்லையற்ற நேசம் இருந்தது. காலத்தின் கலீஃபாவிற்கு கடிதம் எழுதி வந்தார்கள்.

அன்னாரின் மகள் கூறுகின்றார்கள்: கிடைக்கும் பதிலில் ஒருவேளை ஏதாவது மகிழ்ச்சியின் வெளிப்பாடு இருந்தால் பின்னர், பாருங்கள்! இந்த மகிழ்ச்சியின் வெளிப்பாடு இடம் பெற்றுள்ளது என்று மிகவும் ஆர்வத்துடன் எங்களிடம் கூறிவந்தார்கள்.

1991-ம் ஆண்டு ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் சுற்றுப் பயணம் நிகழ்ந்தபோது தமது கரங்களால் எல்லா அறைகளையும் சரிசெய்தார்கள். வீட்டை சீர் செய்தார்கள். இதேபோன்று 2005-ல் நான் (அங்கு) சுற்றுப் பயணத்தில் சென்றபோது அப்போதும் சுயமே எங்களது அறைகளை சரி செய்தார்கள்; சரி செய்ய வைத்தார்கள். கட்டில் போன்றவற்றை அமைத்துக் கொடுத்தார்கள். படுக்கை போன்றவற்றை விரித்தார்கள். மேலும், ஒரு தூய எண்ணத்துடன், நன்றியுணர்வுடன், எல்லா பணிகளையும் செய்யக் கூடியவர்களாக இருந்தார்கள்.இதேபோன்று எங்களுக்கான உணவு தனியாக சமைக்கப்படும் என்று நான் வலியுறுத்திக் கூறியபோதிலும், ஒருவேளை உணவோ எங்கள் சார்பாக தினமும் வரும் என்று அன்னர் கூறினார்கள். மேலும், உள்ளபடியே ஒரு டிஸ் அனுப்பி வந்தார்கள். மேலும், மிகவும் ஏற்பாட்டுடன் சமைத்து வந்தார்கள்.

கூறுகின்றார்கள்: எனது தந்தையாரின் மரணத்திற்குப் பிறகு தாயார் தொழுது கொண்டிருந்தார்கள். மேலும் அழுது கொண்டிருந்தார்கள். மேலும் இறைவா! இவரோ எங்களை விட்டு விட்டு செல்கின்றார்; நீ எங்களை விட்டு விடாதே! என்று ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மரணத்தின்போது கூறிய அதே சொற்களை அன்னார் அப்போது கூறிக் கொண்டிருந்தார்கள்.

கூறுகின்றார்கள்: (இந்த) துஆ ஒப்புக் கொள்ளப்பட்டது என்பதை நான் கண்கூடாக பார்த்துள்ளேன்; மேலும், இது எனது நம்பிக்கையாகும். ஏனெனில், அதன் பிறகு எங்களுக்கு விசா கிடைத்தது.

மகள்கள் அனைவரும் திருமணத்திற்குப் பிறகு பாகிஸ்தானிற்கு சென்று விட்டார்கள். எனவே மல்டிபிள்(மல்டிபிள்) விசாவும் கிடைத்து விட்டது. மேலும் சென்று வருவது இருந்து வந்தது. மேலும் அவர்களுக்கு தனியாக இருக்கின்றோம் என்ற உணர்வும் ஏற்படவில்லை.மகள்கள் அவர்களிடம் சென்று வந்து கொண்டிருந்தார்கள்.

அன்னாரின் மகன் கூறுகின்றார்கள்: பெரும்பாலான விருந்தினர்கள் தாருல் மஸீஹில் தங்கி வந்தார்கள். மேலும், அறைகளில் எப்படி சுடு தண்ணீர் கொண்டு சேர்க்க வேண்டும் என்று தாயார் 12, 15 வயது சிறுமிகளுக்கு சுயமே பயிற்சி கொடுத்து வந்தார்கள். விருந்தினர்களின் தேவைகளை கருத்தில் கொண்டு வந்தார்கள். இதேபோன்று அரசாங்க அதிகாரிகளுடன் மியான் வஸீம் அஹ்மத் ஸாஹிப் அவர்களுக்கு தொடர்பு இருந்து வந்தபோது இவர்கள் அந்த அதிகாரிகளுடைய மனைவிமார்களுக்கும் ஜமாஅத்தைப் பற்றி அறிமுகம் செய்து வைத்து வந்தார்கள். பின்னர் இந்த தொடர்பு பிற்காலத்திலும் அவர்களுடன் நிலைபெற்றிருந்தது.

சத்னாம் சிங் பாஜ்வா ஸாஹிப் அங்குள்ள ஒரு பெரிய அரசியல்வாதியாக இருந்தார்கள். (இந்தியா, பாகிஸ்தான்) பிரிவினை நிகழ்ந்தபோது அன்னார் பாகிஸ்தானில் இருந்து இந்தியாவிற்கு இடம் பெயர்ந்தார்கள். அன்னார் தற்போதுள்ள பிரதாப் சிங் பாஜ்வா அவர்களின் தந்தையார் ஆவார்கள். இவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆவார்கள்.

ஆக, அன்னாரின் மனைவியும் கூறுகின்றார்கள்: அந்நேரத்தில் எங்களது வீட்டிற்கு அடிக்கடி வந்து சென்றார்கள்.

அவர்களும் அமானிதங்களை எங்களிடம், எங்கள் தாயாரிடம் வைத்து செல்வார்கள். ஒருமுறை அவர்கள் அமானிதத்தை வைத்துச் சென்றார்கள். அப்போது அவர்கள் அன்னாரிடம் அதாவது அமத்துல் குத்தூஸ் ஸாஹிபாவிடம், நீங்கள் இதனை திறந்து பார்த்து விட்டீர்களா? என்று கேட்டார்கள். அதற்கு, இது உங்களுடைய அமானிதம் ஆகும்; நான் எப்படி இதனை திறந்து பார்க்க முடியும்? இது சரியாக இருக்கின்றதா? இல்லையா? என்று நீங்கள் பார்த்துக் கொள்ளுங்கள் என அன்னார்,அதாவது எனது தாயார் கூறினார்கள்.

ஏழைகளை மிகவும் கருத்தில் கொண்டிருந்தார்கள்.

ஒருமுறை கூறுகின்றார்கள்: ஒடிசாவில் ஒரு கிராமத்தில் சுற்றுப் பயணத்தில் சென்றிருந்தார்கள். அங்கு சில மக்களுக்கு கொடுப்பதற்கு எதுவும் இல்லாமல் இருந்தது. அப்போது கூறுகின்றார்கள்: பிள்ளைகளாகிய நாங்கள் அனைவரும் உடன் சென்றிருந்தோம். அப்போது

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

பிள்ளைகளுடைய கூடுதல் ஆடைகள் இருந்தன. அவற்றை அன்னார் அந்த மக்கள் உடலை மறைத்துக் கொள்ளும் பொருட்டு கொடுத்து விட்டார்கள். ஏனெனில், அந்த மக்கள் மிகவும் ஏழ்மையான நிலையிலும், மோசமான நிலையிலும் இருந்தார்கள்.

பின்னர் இவர்கள் கூறுகின்றார்கள்: எங்களது தாயார் எந்த திருக்குர்ஆனைக் கொண்டு சிறுமிகளுக்கு திருக்குர்ஆனையும் மொழியாக்கத்தையும் கற்றுக் கொடுத்தார்களோ அந்த திருக்குர்ஆன் ஹஸ்ரத் மீர் முஹம்மது இஸ்ஹாக் ஸாஹிப் அவர்களின் மொழியாக்கத்தை உள்ளடக்கியதாக இருந்தது. மேலும், அந்த திருக்குர்ஆன் பிரதியை ஹஸ்ரத் அம்மான் ஜான் (ரலி) அவர்கள் அன்பளிப்பாக அன்னாருக்கு கொடுத்து இருந்தார்கள்.

அன்னாருடைய மருமகன் இப்ராஹீம் முனீப் ஆவார்கள். கூறுகின்றார்கள்: மியான் வஸீம் அஹ்மத் ஸாஹிபுடைய மரணத்திற்கு பிறகு பத்து ஆண்டுகள் வரை காதியானில் தங்கியிருந்தார்கள். கடுமையாக நோயுற்று இருந்தார்கள். எனவே பின்னர் அவர்களின் மகள்கள் அன்னாரை ரப்வாவிற்கு அழைத்துக் கொண்டு வந்துவிட்டனர். விசாவும் அல்லாஹ்வின் அருளினால் (எக்ஸ்டேன்ட்) நீட்டிக்கப்பட்டுக் கொண்டே வந்தது. ஆயினும், காதியானை விட்டு வெளியில் நீண்ட காலம் தங்கியிருக்கக் கூடாது; எதுவரை காலத்தின் கலீஃபாவின் அனுமதி கிடைத்து விடாதோ அதுவரை நான் இங்கு சில மாதங்களை விட கூடுதலாக தங்க மாட்டேன் என்பதே அன்னாரது எண்ணமாக இருந்து வந்தது.

எவ்வாறு இருப்பினும், அன்னார் எனக்கு எழுதினார்கள். எவ்வளவு காலம் தங்க விரும்புகின்றீர்களோ நீங்கள் தங்குங்கள் என்று நான் அன்னாருக்கு எழுதினேன். பாஸ்போர்ட், விசா நீட்டிக்கப்படுகின்றது. எனவே அதனை செய்து வந்தார்கள். அதன் பிறகு அன்னார் அங்கு சில காலத்தை கழித்தார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் அன்னார் காதியானிற்கு செல்லும்போது, காதியானின் இந்துக்களின் கடை வீதிக்கு செல்லக் கூடாது என்று கூறியிருந்தார்கள். ஏனெனில், அங்குள்ள மக்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏசிபேசி வந்தார்கள். அன்னார் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் இந்தக் கூற்றை எந்த அளவிற்கு பேணி வந்தார்கள்; கருத்தில் கொண்டார்கள் என்றால், பிற்காலத்தில் நிலைமைகள் சரியாகிவிட்டன ; மக்கள் மிகவும் கண்ணியமாக நடக்கத் துவங்கியிருந்தார்கள்; மேலும் ஜல்ஸாவில் ஏராளமான மக்கள் அங்கு சென்று வந்தார்கள்; அஹ்மதிகளும் சென்று வந்தார்கள். குடும்பத்தின் மக்களும் சென்று வந்தார்கள் என்றபோதிலும் அன்னார் எழுபது ஆண்டுகள் வரை காதியானின் (அந்தக்) கடைவீதிக்கு சென்றதில்லை. அமிர்தசரஸிற்கு சென்று ஷாப்பிங் செய்து வந்தார்கள்.

மர்ஹூமாவின் மகள் வழிப்பேத்தி கூறுகின்றார்கள்: காதியானின் சிறிய பிள்ளைகள் அன்னாரை பாட்டி அம்மா என்று அழைத்து வந்தார்கள். மேலும், ஒவ்வொருவரிடமும் அன்னார் பாட்டி போன்ற அன்புடனும், பரிவுடனும் நடந்து வந்தார்கள்.

அடுத்து, அன்னாருடைய மகள் வழிப் பேத்தி எழுதுகின்றார்கள்: ஒருமுறை பலவீனமான இயல்பின் காரணமாக அன்னார் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தார்கள். மாலை நேரத்தில் சில பெண்கள் ஒரு தொலைதூர ஜமாஅத்தில் இருந்து சந்திப்பதற்காக வந்திருந்தார்கள். வீட்டில் பெரியவர் எவரும் இல்லை. பாட்டி ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கின்றார்கள் என்று நான் கூறவிட்டேன். மேலும், அவர்கள் துஆவிற்கான ஒரு கடிதத்தை கொடுத்து விட்டு சென்றுவிட்டனர். எனது பாட்டி எழுந்தபோது, இரண்டு பெண்கள் வந்திருந்தனர் என்று நான் அன்னாரிடம் கூறினேன். அப்போது அன்னார் உடனடியாக (அந்தக்) கடிதத்தை வாங்கிப் படித்து துஆ செய்தார்கள்.

பின்னர் அவர்கள் கடிதத்தில் எழுதியுள்ள விஷயத்தை செயல்படுத்தும்படி தொலைபேசியில் அழைத்து ஒருவருக்கு வழிகாட்டல் வழங்கினார்கள்.

பின்னர் என்னிடம் கூறினார்கள்: மக்கள் மிக தொலை தூரத்தில் இருந்து நேசத்துடன் உங்களது பாட்டனாரிடம் வந்து சென்றனர். அன்னார் அவர்களை இப்படி திரும்பிச் செல்ல அனுமதித்தது கிடையாது. எனவே நீங்களும் விருந்தினர்களை கண்ணியத்துடன் அமரச் செய்யுங்கள். எனக்கு தகவல் கொடுத்திருக்கலாமே!

எனது பாட்டியின் புரிய வைக்கும் அந்தத் தொனியானது மிகவும் நேசத்திற்குரியதாக இருந்தது. அது இன்று வரை எனது மனதில் பதிந்துள்ளது.

அன்னாரின் மகள் வழிப் பேரன் ஸய்யது ஹாஷிர் கூறுகின்றார்: நான் முரப்பி ஆகிக் கொண்டிருக்கின்றேன்; ஏதாவது அறிவுரை வழங்குங்கள் என்று நான் அன்னாரிடம் கேட்டேன்.

இவர் கனடா ஜாமிஆவில் படித்துக் கொண்டிருக்கின்றார்.

அப்போது அன்னார் கூறினார்கள்: காலத்தின் கலீஃபா அவர்களிடமிருந்து அறிவுரைகளை நீ செவிமடுத்து வருகின்றாய்; (வேறு) அறிவுரை செய்வதற்கு அவசியம் இல்லை. அன்னாரின் விஷயங்களை கவனமாக கேள். அவற்றின் படி அமல் செய். பின்னர்

رَبِّ كُلُّ شَيْءٍ خَادِمُكَ

رَبِّ فَاحْفَظْنِي وَانْصُرْنِي وَارْحَمْنِي

என்ற துஆவை ஓதிக் கொண்டிருங்கள் என்றும் என்னிடம் கூறினார்கள். பிறகு உமது வக்ஃபை முழுமையான முறையில் நிறைவேற்றுங்கள்; மேலும் கிலாஃபத்தின் வலிமையான உதவியாளராக திகழுங்கள் என்ற அறிவுரையையே தொலைபேசியில் செய்யப்பட்டது.

ஏராளமான முஸ்லிம் அல்லாதவர்கள் ஜனாஸாவில் கலந்து கொண்டிருந்தார்கள். மிகவும் பற்றுடன் அன்னாரைக் குறிப்பிட்டார்கள்.

அந்த மக்களில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஃபத்ஹ் ஜங் சிங் அவர்களும் அடங்குவார்கள். அன்னாரும் இதனைக் குறிப்பிட்டுள்ளார்கள்: எங்களது குழந்தைப் பருவம் அவர்களில் கரங்களில் அவர்களின் வீடுகளிலேயே கழிந்துள்ளது.

இவர்கள் மையத்தை பெறுவதற்காக வாகா எல்லை வரை சென்றிருந்தார்கள்.

கூறுகின்றார்கள்: நான் எனது தாயையே இரண்டாவது முறையாக அடக்கம் செய்துள்ளேன். கூறுகின்றார்கள்:

நாங்கள் சிறியவர்களாக இருந்தோம்; அப்போது வீட்டிற்கு சென்று வந்தோம். அப்போது இவர்கள் எங்களுக்கு உண்ணவும் பருகவும் கொடுத்து வந்தார்கள்.

மர்ஹூமாவின் ஒரு மகள் வழிப் பேத்தி மாலா கூறுகின்றார்: கிலாஃபத்துடனான அன்பும் கட்டுப்படுதலும் எங்களுக்கு ஒரு முன்மாதிரியாக இருந்தது.

கூறுகின்றார்:

அன்னார் மரணமடைந்ததிலிருந்து நூற்றுக்கணக்கான தொலைபேசி அழைப்புகள் இரங்கல் தெரிவித்து எனக்கு வந்தன. மேலும், ஒவ்வொருவரும் அன்னாரை மிகவும் புகழ்ந்து கூறிக் கொண்டிருந்தார்கள்.

அடுத்து, சில காலங்களுக்காக இவர்கள் அங்கு சென்றிருந்தார்கள். அங்கு காதியானில் தங்கியிருந்தார்கள்.

ஆக, இவர்கள் கூறுகின்றார்கள்: காதியான் வாசிகள் அன்னாரை எவ்வளவு நேசித்தார்கள் என்பதையும்; அன்னாரும் காதியான் மக்களுடன் எவ்வளவு அன்பு கொண்டிருந்தார்கள் என்பதையும் நான் கண்டேன்.

இதேபோன்று அன்னார் கூறுகின்றார்கள். 2008-ம் ஆண்டு அன்னார் எனக்கு கடிதம் எழுதினார்கள்.தாங்கள் காதியான் செல்ல இருந்தீர்கள்; ஆனால் நிலைமைகளின் காரணமாக செல்ல முடியவில்லை. டில்லியிலிருந்து திரும்பி சென்றுவிட்டீர்கள். மேலும் சுற்றுப் பயணம் ஒத்தி வைக்கப்பட்டுவிட்டது. அப்போது இனி சந்திப்பு நடைபெற முடியுமா? முடியாதா? என்று தெரியாது என அன்னார் மிகவும் கவலை தோய்ந்து இருந்தார்கள்.

இங்கு வசிக்கின்ற ஆபித் கான் ஸாஹிப் அவர்கள் அன்னாரின் மகள் வழிப் பேத்தியின் கணவர் ஆவார்கள். கூறுகின்றார்கள்:

மனிதன் வக்ஃபை எப்படி முழுமை செய்ய வேண்டும்? என்று தமது முன்மாதிரியால் எங்களுக்கு கற்றுக் கொடுத்தார்கள். மிகவும் மென்மையான இயல்பு படைத்தவர் ஆவார்கள்.

ஆயினும் கூறுகின்றார்கள்: ஒருமுறை நான் அவர்கள் கடுமையாக பேசியதைக் கண்டேன். அதாவது, காதியானின் ஓர் உள்ளூர் பெண் பிள்ளையின் திருமணம் இருந்தது. அப்போது அன்னார் நோய்வாய்ப்பட்டு விட்டார்கள். அந்த நாள் ஸாஹிப்ஸாதி அமத்துல் குத்தூஸ் ஸாஹிபா அவர்களுக்கு கடுமையான தலைவலி இருந்தது. எனவே அன்னாரின் நோயை கருத்தில் கொண்டு அன்னாரின் மகள் வழிப் பேத்தி அவர்களிடம் வருத்தம் தெரிவித்து விடுங்கள் ; திருமணத்தில் கலந்து கொள்ளாதீர்கள்; இன்று ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள் என்று கூறிவிட்டார். அப்போது, மாலா! நான் திருமணத்தில் கண்டிப்பாக கலந்து கொள்வேன்; எனக்கு காதியானின் மக்களுடன் எப்படிப்பட்ட தொடர்பு உள்ளது என்று உனக்கு தெரியாது என்று அன்னார் கூறினார்கள்.

இதேபோன்று காதியான் தர்வேஷ் டாக்டர் பஷீர் அஹ்மத் ஸாஹிப் நாஸிர் அவர்களின் துணைவியார் அகீலா இஃப்பத் கூறுகின்றார்: எப்போதும் நாஸிராத் சிறுமிகள், மற்றும் லஜ்னாவின் ஏற்பாட்டின் கீழ் தர்வேஷுகளின் மனைவிமார்கள் மற்றும்

திருக்குர்ஆனிலிருந்து...

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

மகள்களுக்கு வழிகாட்டல் வழங்கி வந்தார்கள். மிகவும் சிறப்பான முறையில் நிர்வாக விவகாரங்களை முடிப்பதில் புலமைப் பெற்று இருந்தார்கள். அன்னாருடன் பணி செய்கின்ற நேரத்தில் அன்னாருடைய அன்பையும், நேசத்தையும், உதவியையும், கண்ணியத்தையும் உணர்ந்து கொள்ள முடிந்திருந்தது. அனைத்து பணிகளையும், பொறுப்புகளையும் அடுத்த தலைமுறைக்கு சென்றடையச் செய்து விட வேண்டும் என்பது அன்னாருடைய விருப்பமாக இருந்தது. ஒரு தன்னம்பிக்கைக் கொண்ட மற்றும் நிர்வாகத் திறமை மிக்க நபராக இருந்தார்கள். அன்னார் என்ன பணி செய்தாலும் அதில் சுத்தம் இருக்கும். எங்களுக்கு திருக்குர்ஆனின் மொழியாக்கத்தை கற்றுக் கொடுத்தார்கள். இன்னும் கூறப்போனால், ஃபிக்காவும் கற்றுக் கொடுத்தார்கள். அன்னாரிடம் தர்பிய்யத் பெற்ற அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இளம் பெண் பிள்ளைகள் தொலைதூரம் வரை பரந்து இருக்கின்றனர்; மேலும் ஜமாஅத்திற்கு தொண்டாற்றி வருகின்றனர்.

இதேபோன்று தென் இந்தியாவின் ஹைதராபாதிலிருந்து புஷ்ரா முபாரகா ஸாஹிபா உள்ளார். கூறுகின்றார்கள்: எங்களுக்கு அன்னாருடன் ஆழமான குடும்பத் தொடர்பு இருந்தது. ஜல்ஸாவின் சந்தர்ப்பத்தில் விருந்து உபசரிப்பு செய்வதற்காக பாதி இரவு வரை தாமே நின்று கொண்டு விருந்தினர்களுக்கான உணவையும், பானத்தையும், ஓய்வையும் கருத்தில் கொண்டு வந்தார்கள். மேலும், இவர்கள் நம்முடைய விருந்தினர்கள் அல்ல:. மாறாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருந்தினர்கள் ஆவர் ;இவர்களை கருத்தில் கொள்ள வேண்டும்; என்று அன்னார் கூறிவந்தார்கள். ஒவ்வொரு சின்னச் சின்ன விஷயத்தையும் ஆய்வு செய்வார்கள்.

இதேபோன்று காலித் ஆலாதீன் ஸாஹிப் அவர்களின் துணைவியார் ஸாஜிதா தன்வீர் ஸாஹிப் இருக்கின்றார். அவர் கூறுகின்றார்:

இந்தியாவின் லஜ்னா உறுப்பினர்களுக்கு ஒரு தாயின் அந்தஸ்தைக் கொண்டிருந்தார்கள். எவ்வாறு ஒரு தாய் தனது பால்குடி குழந்தைக்கு எல்லா மரியாதைகளையும் விரல்களைப் பிடித்து கற்றுக் கொடுப்பாரோ முற்றிலும் அதேபோன்று ஹஸ்ரத் ஆபா ஜான் எல்லா ரீதியிலும், ஒவ்வொரு தருணத்திலும் எங்களது கல்வி மற்றும் தர்பிய்யத்தை கருத்தில் கொண்டார்கள். அதற்காக நாங்களும், எங்களது சந்ததிகளும் எப்போதும் அன்னாருக்கு நன்றியுடையவர்களாக இருப்போம்.

ஆக, காதியானின் பெண்மணிகளிடமிருந்தும் எண்ணற்ற கடிதங்கள் எனக்கு வந்திருக்கின்றன. மேலும், எவர்களுடன் அன்னாருக்கு ஏதாவது ஒரு வகையில் தொடர்பு ஏற்பட்டிருந்ததோ அந்த அனைத்து பெண்களிடமிருந்தும் வந்துள்ளன. இதேபோன்று,அன்னார் எங்களை ஒரு தாயைப் போன்று பாராமரித்தார்கள் என்று காதியானின் பழைய ஆண்களும், பெண்களும் எழுதியுள்ளனர்.

நான் கூறியது போன்று கிலாஃபத்துடனான தொடர்பை அன்னாருடைய பிள்ளைகளும் குறிப்பிட்டுள்ளனர். மற்ற பெண்களும் அதனைக் குறிப்பிட்டுள்ளார்கள். எவ்வாறு ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களிடம் பணிவு மற்றும் முழுமையான நன்றியுணர்வை வெளிப்படுத்தியிருந்தார்களோ அந்த தொடர்பு நிலை பெற்றிருந்தது. என்னுடனும் அதே தொடர்பு நிலைபெற்றிருந்தது. இங்கும் என்னை சந்தித்தபோது மிகவும் அதிகமான மரியாதையுடனும்,கண்ணியத்துடனும் சந்தித்தார்கள்.2005-ல் காதியான் சென்றிருந்தேன். அப்போது மிகவும் அக்கறையுடன் விருந்து உபசரிப்பு செய்வதற்கு முயற்சி செய்தார்கள். பின்னர் ஒவ்வொரு சந்திப்பின்போதும் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார்கள். அது அன்னாரின் முகத்தில் வெளிப்பட்டு வந்தது.2005-ம் ஆண்டில் உடல்நிலை பாதிக்கப்பட்டிருந்தபோதிலும் காதியானிலிருந்து திரும்பிச் செல்லும் பயணத்தில் டில்லி வரை வந்தார்கள்.

அல்லாஹ் அன்னாருடைய அந்தஸ்துகளை உயர்த்துவானாக. மேலும், அன்னாரின் சந்ததிகளுக்கும் அன்னாரின் நன்மைகளை தொடரச் செய்வதற்கான நற்பேறை வழங்குவானாக. காதியானின் மக்களை அன்னார் எந்த அன்புடன் வைத்திருந்தார்களோ அதே அன்புடன் அவர்கள் பரஸ்பரம் வாழ்வதற்கு அல்லாஹ் அவர்களுக்கு நற்பேறு வழங்குவானாக.

தற்போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் குடும்பத்துடன் நேரடியான இரத்த உறவு கொண்டவர் எவரும் அங்கு இல்லை. அங்கு யாராவது செல்லக் கூடிய நிலைமைகளை அங்கு அல்லாஹ் உருவாக்குவானாக. அல்லாஹ் மர்ஹூமாவின் அந்தஸ்துகளை உயர்த்துவானாக.

ஒரு ஹாழிர் ஜனாஸா (நிகழ்விடத்தில் இருக்கும் ஜனாஸா) உள்ளது. (ஜனாஸா வந்துவிட்டதல்லவா?) அது யூ.கேவைச் சேர்ந்த முஹம்மது அர்ஷத் ஸாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் கடந்த நாட்களில் 71 வயதில் மரணமடைந்து விட்டார்கள்.

اِنَّا لِلّٰہِ وَاِنَّا اِلَیۡہِ رَاجِعُوۡن

அன்னார் யூசுஃப் ஸாஹிப் அவர்களின் மகனாக இருந்தார்கள். நைரோபியில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் அன்னார் (அதாவது மர்ஹூமின் தந்தையார்) பைஅத் செய்திருந்தார்கள். மர்ஹூம் அன்னாரின் மகனாக இருந்தார்களா? அல்லது மகன் வழிப்பேரனா?

எவ்வாறு இருப்பினும், யூசுஃப் ஸாஹிப் 1935-ல் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் பைஅத் செய்தார்கள். மர்ஹூம் அன்னாரின் சந்ததியைச் சேர்ந்தவர் ஆவார்கள். மர்ஹூம் 15 வயதில் நைரோபியிலிருந்து யூ.கேவிற்கு வந்தார்கள். அன்னாரின் திருமணம் ஹஸ்ரத் கலீஃபா ஸலாஹூத்தீன் ஸாஹிப் அவர்களின் மகளும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஸஹாபியுமான ஹஸ்ரத் டாக்டர் கலீஃபா ரஷீதுத்தீன் ஸாஹிப் (ரலி) அவர்களின் மகன் வழிப் பேத்தியுமான அமத்துன் நஸீர் ஸாஹிபா அவர்களுடன் நடந்தது. அல்லாஹ்வின் அருளினால் மர்ஹூம் மூஸியாக இருந்தார்கள். மனைவி மட்டுமின்றி இரண்டு மகன்களும், ஒரு மகளும் உள்ளனர். ஜமாஅத்துடன் மிகவும் உறுதியான தொடர்பு இருந்தது. எங்கே இருந்தாலும் பல்வேறு ரீதியில் ஜமாஅத்திற்கு தொண்டாற்றி வந்தார்கள். குத்தாமுல் அஹ்மதிய்யாவிலும் முஃதமீம் என்ற அடிப்படையில் பணி செய்து வந்தார்கள். 20 ஆண்டுகளுக்கும் கூடுதல் காலம் வரை பிரிட்டன் ஜமாஅத்தின் நேஷனல் வெளியீட்டுச் செயலராக தொண்டாற்றுவதற்கு நற்பேறு பெற்றுள்ளார்கள். கல்வியறிவு படைத்த மனிதராக இருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கண்ணியத்திற்கு இழுக்கு சேர்க்கும் வகையில் ஸல்மான் ருஷ்தி புத்தகம் எழுதியபோது ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் கட்டளை மற்றும் வழிகாட்டலின் ஒளியில் அதற்கு மறுப்பு தெரிவிப்பதற்காக ஒரு நூலை எழுதுவதற்கு நற்பேறு பெற்றார்கள். ஜமாஅத் அளவிலான தொழுகையை பேணக் கூடியவராக இருந்தார்கள். அன்னார் இங்கு இடம் பெயர்ந்து வந்ததிலிருந்து, இங்கு வந்து தொழுகைகளை தொழுது கொண்டிருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் தமது தங்குமிடத்தைக் கூட இஸ்லாமாபாதிற்கு அருகில் அமைத்துக் கொண்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் நேசமிக்க தொடர்பு இருந்தது. முறையாக திருக்குர்ஆன் திலாவத் செய்து வந்தார்கள். மர்ஹூமிற்கு தப்லீஃக்கிற்கான ஆர்வமும் இருந்தது. அதேபோன்று தொடர்ந்து முறையாக சந்தாக்களையும் செலுத்தி வந்தார்கள். மக்களுடன் அன்பு மற்றும் நேசத்துடன் சந்திக்கக் கூடியவராகவும், இனிமையாக உரையாடக் கூடியவராகவும், கிலாஃபத்துடன் ஆழமான பற்றுக் கொண்ட தொடர்பை கொண்டிருந்த தூய மனிதராகவும் இருந்தார்கள்.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி)அவர்கள் ஒருமுறை இவர்களைக் குறித்து கூறினார்கள்: அர்ஷத் அஹ்மதி ஸாஹிப் அவர்களை எப்போதும் நான் எவ்வளவு கட்டுப்பட்டவராக கண்டுள்ளேன் என்றால், அதற்கு மிகக் குறைவான உதாரணங்களே கிடைக்கும். நான் என்னவெல்லாம் அவர்களுக்கு கூறினேனோ அவற்றை அன்னார் ஒப்புக் கொண்டார்கள். மேலும் இந்த அம்சத்தின் அடிப்படையிலும் அவர்கள் மீதும் பின்னர் அன்னாரின் காரணமாக முழு குடும்பத்தின் மீதும் எனது உள்ளத்தில் மிகுந்த மரியாதை உள்ளது.

மேலும் உண்மையில் கிலாஃபத்துடன் அந்தக் கட்டுப்படுதல் அதன் பின்னரும் நிலை பெற்றிருந்தது. நானும் அன்னாரை பணிவுள்ளவராகவும், கிலாஃபத்துடன் நன்றியுணர்வு கொண்டவராகவும் கண்டுள்ளேன். ஜமாஅத்தின் கண்ணியம் மற்றும் மரியாதைக்கு அன்னார் எப்போதும் முன்னுரிமை வழங்கி வந்தார்கள். அல்லாஹ் அன்னாருடன் கருணை மற்றும் பாவமன்னிப்புடன் நடந்து கொள்வானாக. மேலும், அன்னாரின் சந்ததிகளுக்கும் அன்னாரின் நன்மைகளை தொடரச் செய்வதற்கான நற்பேறை வழங்குவானாக. அன்னாருடைய ஒரு மகன் வாழ்வை

*நபிமொழியிலிருந்து...*

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

அர்ப்பணித்தவராகவும் இருக்கின்றார்.

ஜனாஸா காயிப் ஒன்று உள்ளது. அது ஆஃப்ரிக்க அமெரிக்கராகிய அஹ்மது ஜமால் ஸாஹிபுடையது ஆகும். அமெரிக்காவில் வசித்து வந்தார்கள். கடந்த நாட்களில் 92 வயதில் அன்னார் மரணமடைந்து விட்டார்கள்.

اِنَّا لِلّٰہِ وَاِنَّا اِلَیۡہِ رَاجِعُوۡن

இவர்கள் 1930-ம் ஆண்டு பிறந்தார்கள். 1951-ல் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் கரத்தில் பைஅத் செய்தார்கள். 1950-1960-க்கு மத்தியில் மர்ஹூமிற்கு சிகாகோவின் ஸாதிக் மஸ்ஜிதிற்காக பொருள் தியாகம் செய்வதற்கான நற்பேறு கிடைத்தது. மிகவும் பணிவானவரும், எளிமையான இயல்பு படைத்தவராக இருந்தார்கள். ஜமாஅத் மற்றும் கிலாஃபத்துடன் மிகவும் நேசமும் நன்றியுணர்வும் மிக்க தொடர்பு இருந்தது. MTA பார்ப்பதற்காக முதலில் தமது வீட்டில் டிஷ் ஆன்டனாவிற்கான ஏற்பாட்டையும் அதன் பின்னர் ஆன்லைனிற்கான ஏற்பாட்டையும் செய்திருந்தார்கள். எனது குத்பாக்களை மிகவும் ஏற்பாட்டுடன் முறையாக தொடர்ந்து கேட்டு வந்தார்கள். தம்மை சந்திக்க வரக் கூடியவர்களிடம் குத்பாவின் அடிப்படையில் பின்னர் உரையாடியும் வந்தார்கள். வெறும் கேட்க மட்டும் செய்யவில்லை. இன்னும் கூறப்போனால், குறிப்பு எடுத்து உரையாடியும் வந்தார்கள். மர்ஹூம் மஸ்ஜிதிலிருந்து 90 மைல் தொலைவில் வசித்து வந்தார்கள். பின்னரும் தமது வயது மற்றும் உடல் பலவீனமாக இருந்தபோதிலும் தொடர்ந்து ஜூமுஆ தொழுகைக்கு வந்து கொண்டிருந்தார்கள். தொடர்ந்து சந்தாக்களை செலுத்தி வந்தார்கள். அன்னாருக்கு நினைவூட்டுவதற்கு ஒருபோதும் அவசியம் ஏற்படவில்லை. ஏனைய பொருளாதார திட்டங்களிலும் போட்டிப் போட்டுக் கொண்டு பங்கு பெற்று வந்தார்கள். அன்னாருக்கு ஒரு மகள் இருக்கின்றார். ஆனால், அவர் ஜமாஅத்துடன் தொடர்புடையவராக இல்லை. அல்லாஹ் அன்னாருடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. மேலும், அன்னாரின் மகளுக்கும் அன்னாரது துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படட்டுமாக! மேலும் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொள்வதற்கு அவருக்கும் நற்பேறு கிடைக்கட்டுமாக! ஆக, தற்போது ஜனாஸா ஹாழிர் ஒன்று உள்ளது. மேலும் இரண்டு காயிப் ஜனாஸாக்கள் உள்ளன. ஜூமுஆவிற்கு பிறகு இந்த ஜனாஸாக்களுக்கு தொழுகை நடத்துவேன்.

தமிழாக்கம்

மவ்லவி A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * *

## தஃப்ஸீரே கபீர்... (1ம் பக்க தொடர்ச்சி)

பீடியா, தொகுதி 5, பக்கம் 676) வெளிப்படையில் இந்தக் காலம் திருக்குர்ஆனின் கூற்றிற்கு எதிரானதாக தெரிகின்றது. ஆனால், நாம் கிறிஸ்தவ வரலாற்றை ஆராய்ந்து பார்க்கும்போது இந்த வரலாறு தவறானது ஆகும் என்பது தெரிய வருகின்றது. ரோமானியப் பேரரசர் கான்ஸடன்டாயின் கிறிஸ்தவராக ஆன அசல் ஆண்டு கி.பி 309-ம் ஆண்டு ஆகும். அதற்கான சான்று இதுவாகும். அதாவது, கிறிஸ்தவ காலண்டரில் தவறு ஏற்பட்டுள்ளது என்பதை கிறிஸ்தவ புவியியல் ஆராய்ச்சியாளர்கள் சுயமே ஒப்புக் கொண்டுள்ளார்கள். ஆக, ஆர்ச் பிஷப் உஷ்ரஸ்( உஸ்;;) என்பவர் வரலாற்று அறிவு எனும் தமது நூலில், மேலும் டாக்டர் கித்தோ (கித்தோ) டெய்லி பைபிள் அல்ஸ்டேரேஷன்ஸ் என்ற தமது நூலில் இதனை நிரூபணம் செய்துள்ளார்கள். அதாவது, கிறிஸ்தவ காலண்டரில் குறிப்பிடப்பட்டுள்ள சிலுவை சம்பவ தேதி தவறானதாகும். மேலும் இந்த தவறு கி.பி 527-ல் ஏற்பட்டது. உண்மை என்னவென்றால், இந்த தேதியிலிருந்து நான்கு அல்லது ஐந்து ஆண்டு முன்னரே மஸீஹ் பிறந்திருந்தார்கள். எனவே அந்த நேரத்தில் அன்னாரின் வயது வெறும் நான்கு அல்லது ஐந்து வயதாகவே இருக்கின்றது. ஆனால், அவர் முப்பத்திதைந்து வயதில் சிலுவையில் அறையப்பட்டிருந்தார்கள். தற்போது இந்த கூற்றிற்கேற்ப நான்கு மற்றும் ஆறுக்கு இடைப்பட்ட எண்ணைக் குறிப்பிட்டால் பின்னர் அது ஐந்தாகும். மஸீஹ் 35 வது வயதில் சிலுவையில் அறையப்பட்டிருந்தார்கள். எனவே கிறிஸ்தவ ஆண்டிலிருந்து 28 ஆண்டுகளை கழிக்க வேண்டியது வரும். ஏனெனில், கிறிஸ்தவ காலண்டரிலிருந்து 28 ஆண்டுகளுக்கு பிறகு சிலுவை சம்பவம் நிகழ்ந்துள்ளது. தற்போது 28 ஆண்டுகளை 337 ஆண்டுகளிலிருந்து கழித்தால் பின்னர் அது 309 ஆண்டுகள் ஆகின்றன. இதுவோ கிறிஸ்தவர்களின் அறிவிப்புகளை ஒப்புக் கொண்டதன் அடிப்படையில் செய்யப்பட்ட கணக்கீடு ஆகும். ஒருவேளை இந்த சாட்சியம் இல்லையென்றாலும் கூட அந்நிலையிலும் பைபுளிற்கு எதிரில் எல்லா செய்திகளும் சரியானதாக நிரூபணமாகியுள்ள திருக்குர்ஆனின் கூற்றிற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

இந்த வசனத்தில் இந்த விஷயம் கூறப்பட்டுள்ளது. அதாவது நீண்ட கால துன்பங்களைக் கண்டு பதற்றமடையக் கூடாது. நமக்கு முன்னர் கிறிஸ்தவ சமுதாயத்திற்கு முந்நூறு ஆண்டுகள் வரை துன்பங்கள் கொடுக்கப்பட்டன. ஆனால், அவர்கள் பொறுமையை கைகொண்டார்கள். மேலும், இறுதியில் அந்தப் பொறுமைக்கான மிகவும் இனிமையான கனிகளை உண்டார்கள். எனவே நீங்கள் அவசரப்படக் கூடாது. இன்னும் கூறப்போனால் உங்களது பணியில் நீங்கள் ஈடுபட்டு இருக்க வேண்டும். மேலும், உறுதிப்பாட்டுடன் துன்பங்களை எதிர் கொள்ள வேண்டும்

(தஃப்ஸீரே கபீர், தொகுதி 4, பக்கம் 440, 2010-ம் ஆண்டு காதியான் பதிப்பு)

* * * * * * *

## மல்ஃபூஸாத்... (1ம் பக்க தொடர்ச்சி)

தன்மானம், அவர் தன்னைப் போன்ற ஒரு மனிதனை அவருக்கு தகுதியில்லாத புகழ்ச்சியை எடுத்துரைப்பதை எதிர்பார்க்காது. இறையச்சமுடையவருக்கு அல்லாஹ் சுயமே எல்லா வகையான வழிகளையும் திறந்து விடுகின்றான். அவருக்கு எப்படிப்பட்ட இடத்திலிருந்து உணவு வழங்குகின்றான் என்றால் அதனை வேறு ஒருவர் அறியக் கூட முடியாது. அல்லாஹ் சுயமே அவரது நண்பனாகவும், பராமரிப்பாளராகவும் ஆகிவிடுகின்றான். அல்லாஹ்வின் அடியார்கள் உலகத்தை விட மார்க்கத்திற்கு முதன்மை வழங்குகின்றனர். அவர்களுடன் அவன் நேசமும், அன்பும் கொள்கின்றான். ஆக

وَاللّٰہُ رَءُوۡفٌۢ بِالۡعِبَادِ

(இத்தகு அடியார்களிடம் அல்லாஹ் மிகுந்த பரிவுக் காட்டக் கூடியவனாவான்.(2: 208) என்று அவன் சுயமே கூறுகின்றான்.

(மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம் 493, காதியான் பதிப்பு 2018-ம் ஆண்டு)

* * * * * *

## 128-வது காதியான் ஜல்ஸா-2023

ஸய்யிதுனா ஹுஸூர் அன்வர் அவர்கள் வருகிற டிசம்பர் 29,30,31 ஆகிய தேதிகளில் 128-வது காதியான் ஆண்டு மாநாட்டை நடத்துவதற்கு ஒப்புதல் நல்கியுள்ளார்கள். ஜமாஅத் உறுப்பினர்கள் இந்த அருளுக்குரிய ஜல்ஸாவில் கலந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடன் தயாரிப்புகளை துவங்கிவிடுங்கள். அல்லாஹ் நம் அனைவருக்கும் இந்த இறை மாநாட்டிலிருந்து பயன் பெறும் நற்பேறை வழங்குவானாக. மேலும், இந்த ஜல்ஸா எல்லா வகையிலும் வெற்றி பெறுவதற்காகவும், நற்பேறு பெற்ற ஆன்மாக்களின் நேர்வழிக்கு காரணியாக அமைவதற்காகவும் துஆ செய்து வாருங்கள்.

(நாஸிர் இஸ்லாஹ்-வ- இர்ஷாத் மர்கஸிய்யா-காதியான்)

உங்களுக்கு வேலையாட்கள் வேண்டுமா?

உங்களுக்கு டிரைவர், மேஸ்திரி, மெக்கானிக், எலக்ட்ரீசியன் தேவையென்றால் எங்களை தொடர்பு கொள்ளவும்.

நாங்கள் உங்களுக்கு நம்பிக்கையான, நல்ல வேலையாட்களை ஏற்பாடு செய்துகொடுப்போம்.

KHAIRUL-ISLAM

JAYGON-WEST BENGAL 97348 44732

நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்

தொலைபேசி எண் : 1800 103 2131

இந்த *TOLL FREE* எண்ணில்

ஃபோன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

திருக்குர்ஆனிலிருந்து...

அவர்கள் இரவு நேரத்தில்
குறைவாகவே
துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)




Manufacturer and Retailer of Leather Fashion and Bags.
Specialized in the Desing and Production of Quality & Sale Online Platform
Like Flipkart, Amazon, Meesho. & Product Key Word is "Grizzly Wallet"
6294738647 mygrizzlyindia@gmail.com, www.mygrizzlyindia.com

my grizzly india
my grizzly india
my grizzly india

**பள்ளிவாயில்கள் - அன்பு மற்றும் அமைதியின் மையங்கள்**

**இஸ்லாம் அனைத்து வகையான தீவிரவாதம், பயங்கரவாதம் அல்லது வன்முறையை முற்றிலும் எதிர்க்கிறது என்பதே இன்றும்,என்றும் இருக்கக் கூடிய உண்மை ஆகும். நம்பிக்கை கொள்வதற்கான சுதந்திரம் மற்றும் மனசாட்சியின் சுதந்திரத்தைக் குலைப்பதற்கான எந்தவொரு முயற்சியையும் அது இயன்ற அளவு வலுவான வார்த்தைகளால் கண்டிக்கின்றது.எந்தவொரு சூழ்நிலைகளிலும் மார்க்கத்தின் விஷயத்தில் பலவந்தத்தையோ அல்லது நிர்பந்தத்தையோ இஸ்லாம் அனுமதிப்பதில்லை. புனித குர்ஆனில் எழுதப்பட்டுள்ளதைப் போன்று மதம் என்பது உள்ளம் சார்ந்த ஒரு விஷயம் என்றே இஸ்லாம் கற்பிக்கின்றது.**

**ஒரு பள்ளிவாயிலின் முதன்மையான நோக்கம் நிச்சயமாக ஏக இறைவனை வணங்குவதாகும்.இறை வணக்கத்திற்காக ஒன்றிணையக் கூடிய முஸ்லிம்களுக்கு அவர்களின் பரஸ்பர உறவுகளை வலுப்படுத்துவதற்கும், சமூக உறுப்பினர்கள் மத்தியில் ஒற்றுமையை வளர்த்துக் கொள்வதற்குமான ஓர் இடமாக இருக்க வேண்டும் என்பது இரண்டாவது நோக்கமாகும்.**

**இஸ்லாமிய போதனைகளை முஸ்லிம் அல்லாதவர்களுக்கு அறிமுகப்படுத்துவதற்கும். மேலும் பரந்த சமூகத்தின் உரிமைகளை நிறைவேற்றுவதற்கும் ஒரு காரணியாக இருக்க வேண்டும் என்பது மூன்றாவது நோக்கமாகும்**

## ஸய்யிதுனா ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் பால்டிமோர் - மேரிலேண்ட், அமெரிக்காவிலுள்ள பைத்துஸ் ஸமது பள்ளிவாசலின் திறப்பு விழாவையொட்டி அக்டோபர் 20-2018 அன்று நடைபெற்ற வரவேற்பு நிகழ்ச்சியில்

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் - அளவற்ற அருளாளனும், மேன்மேலும் கருணை காட்டுபவனுமாகிய அல்லாஹ்வின் பெயரால் ஆரம்பிக்கின்றேன்.

மதிப்பிற்குரிய அனைத்து விருந்தினர்களுக்கும் அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மத்துல்லாஹி வ பரக்காதஹு. அல்லாஹ்வின் சாந்தியும், அருட்கொடைகளும் உங்கள் அனைவரின் மீது உண்டாகட்டுமாக!

முதலில் இன்று இங்கே எங்களுடன் இணைந்திட நேரம் ஒதுக்கிய எமது விருந்தினர்கள் அனைவருக்கும் நான் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி எனது இதயப்பூர்வமான நன்றியுணர்வையும், நன்றியையும் வெளிப்படுத்த விரும்புகின்றேன். உலகின் பெரும்பாலான பகுதிகளில் மதத்தின் மீதான ஈடுபாடு குறைந்து கொண்டே இருக்கும். ஒரு காலத்தில். நீங்கள் ஒரு மத சமுதாயத்தின் நிகழ்ச்சியில் கலந்து கொள்வதனால் உங்கள் வருகை குறிப்பிடத்தக்கதும், பாராட்டிற்குரியதும் ஆகும்.

ஒரு புதிய பள்ளிவாசல் இங்கு திறக்கப்படுவதற்கான ஒரு முஸ்லிம் விழாவில் நீங்கள் கலந்து கொள்வது அதுவும் உங்களில் பெரும்பாலானோர் முஸ்லிம் அல்லாதவர்கள் ஆகவும் மேலும், மார்க்க ரீதியாகவும் உணர்வு ரீதியாகவும் பள்ளிவாயில்கள் உடனோ அல்லது இஸ்லாத்துடனோ நீங்கள் தொடர்பு இல்லாதவர்களாகவும் இருப்பதும் இன்னும் சிறப்பான குறிப்பிடத் தக்க விஷயமாக இருக்கின்றது. நிச்சயமாக, வருந்தத்தக்க முறையில் இஸ்லாம் குறித்தும் மற்றும் முஸ்லிம்கள் குறித்தும் பெரும்பாலான மக்கள் சந்தேகங்களையும் இன்னும் அச்சங்களையும் கூட கொண்டிருக்கக் கூடிய ஒரு காலகட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்பது குறித்து நாம் அனைவரும் நன்றாகவே அறிந்திருக்கின்றோம். இந்த அனைத்து விஷயங்களின் ஒளியில் சந்தேகத்திற்கிடமின்றி உங்களுடைய வருகை போற்றத் தக்கதாக இருக்கின்றது. மேலும் உங்கள் அனைவருக்கும் என்னுடைய ஆழ்ந்த நன்றியினை தெரிவிப்பதற்கு கடமைப்பட்டவனாக ஆக்குகின்றது. அதுமட்டுமல்லாமல் நான் உங்களுக்கு கூறுகின்ற நன்றி வெறுமனே மரியாதை நிமித்தமானது மட்டுமே இல்லை. மாறாக அது என் மீது இஸ்லாத்தினால் சுமத்தப்பட்ட ஒரு மார்க்கக் கடமையாகும் என்று கட்டாயமாக நான் உங்களுக்கு தெளிவுபடுத்திட வேண்டும். ஏனெனில், எவர் ஏனைய மக்களுக்கு தன்னுடைய நன்றியினை வெளிப்படுத்தத் தவறுவாரோ அவர் எல்லாம் வல்ல இறைவனுக்கும் கூட நன்றியுடையவராக இருக்க முடியாது என்று இஸ்லாத்தின் தீர்க்கதரிசி புனித நபிகள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் போதித்துள்ளார்கள். எனவே உங்கள் அனைவருக்கும் என்னுடைய உளப்பூர்வமான நன்றியினை வெளிப்படுத்துவதை நான் என்னுடைய மார்க்க கடமையாக கருதுகிறேன்.

அடுத்ததாக, நீங்கள் இஸ்லாத்தை பற்றி இன்னும் அதிகமாக கற்றுக் கொள்ள வேண்டும் என்ற நம்பிக்கையுடனும், நாங்கள் ஏன் இந்தப் பள்ளிவாசலைக் கட்டி இருக்கின்றோம் என்பதற்கான காரணங்களை கண்டுபிடிப்பதற்காகவும் எங்களுடன் இன்று சேர்ந்து இருக்கின்றீர்கள் என்று நான் எதிர்பார்க்கின்றேன். நிச்சயமாக பெரும்பாலான மக்கள் இஸ்லாத்தை பற்றி அவர்கள் ஊடகங்களில் காண்பதன் அடிப்படையில் இஸ்லாத்தைப் பற்றிய தவறான எண்ணங்களை கொண்டிருக்கின்றார்கள் என்பது உண்மையாக இருக்கின்ற நிலையில் இத்தகைய ஆர்வமும், ஈடுபாடும் நிச்சயமாக இயல்பானதே ஆகும். நிச்சயமாக நாம் வாழக் கூடிய சூழலில் நீங்கள் இந்த பள்ளிவாசல் குறித்த அச்சங்களையும், கவலைகளையும் கொண்டிருந்தால் அது நிச்சயமாக புரிந்துக் கொள்ளக் கூடியதே ஆகும்.

சந்தேகத்திற்கிடமின்றி இன்று உலகின் பெரும்பாலான பகுதிகளில் இப்பொழுது அதிகரித்துக் கொண்டிருக்கின்ற மற்றும் மேலோங்கி இருக்கின்ற ஒரு கண்ணோட்டம் என்னவென்றால் முஸ்லிம்கள் அஞ்சப்பட வேண்டியவர்கள் என்பதாகும். ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் பொழுது முஸ்லிம்கள் சமுதாயத்தை பிளந்து மேலும், சமுதாய ஒத்துழைப்பின் கட்டமைப்பையும் அமைதியையும் உடைத்தெறிய விரும்பும் பிரச்சனை செய்யக் கூடியவர்கள் என்று பெயரிடப்படுகிறார்கள். அமைதியாக ஒன்றிணைந்து வாழவோ அல்லது மற்றவர்களுடன் அமைதியாக வாழவோ முடியாத மக்களாக முஸ்லிம்கள் பார்க்கப்படுகின்றார்கள். மேலும், ஒரு பள்ளிவாயில் கட்டப்படுவது என்பது நிறைய முஸ்லிம் அல்லாதவர்களுக்கு மத்தியில் இன்னும் அதிகமான பயத்தையும், கவலையையும் தூண்டக் கூடியதாக இருக்கிறது.சமுதாயத்தில் மற்றவர்களில் இருந்து தங்களைத் தனிமைப்படுத்திக் கொள்வதற்கான மற்றும், அவர்கள் வாழக் கூடிய ஊர் நகரம் அல்லது நாட்டிலும் கூட அமைதியையும் நலனையும் பலவீனப்படுத்துவதற்கான ஒரு மையத்தை ஒரு பள்ளிவாசல் முஸ்லிம்களுக்கு வழங்கிவிடும் என்று நிறைய மக்கள் அஞ்சுகின்றார்கள். முஸ்லிம் அல்லாதவர்களின் உலகில் நிறைய மக்களின் மத்தியில் அத்தகைய அச்சங்கள் நிச்சயமாக இருக்கவே செய்கின்றன என்பதை நானே தனிப்பட்ட முறையில் கண்டுள்ளேன். மேலும், வருந்தத் தக்க முறையில் இஸ்லாம் மற்றும் அதனைப் பின்பற்றுவோர் மீதான அத்தகைய கோபமும், சந்தேகமும் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.

ஆயினும் கூட இஸ்லாம் அனைத்து வகையான தீவிரவாதம், பயங்கரவாதம் அல்லது வன்முறையை முற்றிலும் எதிர்க்கிறது என்பதே இன்றும்,என்றும் இருக்கக் கூடிய உண்மை ஆகும். நம்பிக்கை கொள்வதற்கான சுதந்திரம் மற்றும் மனசாட்சியின் சுதந்திரத்தைக் குலைப்பதற்கான எந்தவொரு முயற்சியையும் அது இயன்ற அளவு வலுவான வார்த்தைகளால் கண்டிக்கின்றது. எந்தவொரு சூழ்நிலைகளிலும் மார்க்கத்தின் விஷயத்தில் பலவந்தத்தையோ அல்லது நிர்பந்தத்தையோ இஸ்லாம் அனுமதிப்பதில்லை. மாறாக, புனித குர்ஆனில் எழுதப்பட்டுள்ளதைப் போன்று மதம் என்பது உள்ளம் சார்ந்த ஒரு விஷயம் என்றே இஸ்லாம் கற்பிக்கின்றது. இதனால், முஸ்லிம் அல்லாதவர்களிடையே உள்ள இஸ்லாம் குறித்த பரவலான மற்றும் பொதுவான கருத்துகள் உண்மையில் தவறான கருத்துகள் என்றே நான் உறுதியாக நம்புகிறேன். எந்த பள்ளிவாசலை பொருத்தவரையிலும் இஸ்லாத்தின் போதனைகளின்படி அதன் உண்மையான நோக்கங்களைப் பார்ப்பது மிகவும் அவசியமாகும்.

முஸ்லிம்கள் அதாவது உண்மையான முஸ்லிம்கள் என்று நான்

சொல்ல வேண்டும். பள்ளிவாசலைக் கட்டும்பொழுது என்ன நாடுகின்றார்கள்? ஒரு நபர் பள்ளிவாசலின் குறிக்கோள்களையும், அவை முஸ்லிம்களுக்கான புனிதமான இடங்களாகக் கருதப்படுவதற்கான காரணங்களையும் நியாயமாக மதிப்பிட்டால் உண்மையான பள்ளிவாசல்கள் அஞ்சத் தக்கவை அல்ல என்பதை அவர் விரைவில் உணர்ந்து கொள்வார். நீங்கள் அனைவரும் இந்த புதிய பள்ளிவாசலும், அனைத்து உண்மையான பள்ளிவாசல்களும் எதனைக் குறிக்கின்றன என்பதை நன்றாக புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவும் உள்ளூர் சமூகத்தினரிடையே இருக்கக் கூடிய எந்தவொரு அச்சத்தையும் போக்குவதற்காகவும் நான் இப்போது (பள்ளிவாயில் எழுப்பப்படுவதற்கான) முக்கிய நோக்கங்களை சுருக்கமாக குறிப்பிடுவேன்.

ஒரு பள்ளிவாயிலின் முதன்மையான நோக்கம் நிச்சயமாக ஏக இறைவனை வணங்குவதாகும். மேலும் பள்ளிவாசல்கள் என்பவை முஸ்லிம்கள் ஒன்று சேர்ந்து எல்லாம் வல்ல இறைவன் முன் குனிந்தும், சிரம் தாழ்ந்தும் வணங்கும் இடங்களாகும். இத்தகைய வழிபாடு ஒரு நாளைக்கு ஐவேளை நடத்தப்படுகின்றது. மேலும் இது ஸலாத் என்று அறியப்படுகின்றது. இது ஆணும், பெண்ணும் கடைபிடிக்க வேண்டிய ஒவ்வொரு முஸ்லிமிற்கும் உரிய நம்பிக்கையின் ஓர் அடிப்படை தூணாகும்.

**ஒரு பள்ளிவாசலின் இரண்டாவது முக்கியமான நோக்கம்:**

இறை வணக்கத்திற்காக ஒன்றிணையக் கூடிய முஸ்லிம்களுக்கு அவர்களின் பரஸ்பர உறவுகளை வலுப்படுத்துவதற்கும், சமூக உறுப்பினர்கள் மத்தியில் ஒற்றுமையை வளர்த்துக் கொள்வதற்குமான ஓர் இடமாக இருக்க வேண்டும் என்பதாகும். எனவே, அவர்களின் பள்ளிவாயில்கள் மூலமாக முஸ்லிம்கள் அதிகமாக சொந்தத்தின் பிணைப்புகளை வளர்த்துக் கொள்ளவும், சகோதரத்துவம் மற்றும் பரஸ்பர அனுதாபத்தின் ஒரு சூழலை நிலைநாட்டவும் முடிகின்றது.

**எந்தவொரு பள்ளிவாசலின் மூன்றாவது முக்கிய நோக்கம்:**

அது இஸ்லாமிய போதனைகளை முஸ்லிம் அல்லாதவர்களுக்கு அறிமுகப்படுத்துவதற்கும். மேலும் பரந்த சமூகத்தின் உரிமைகளை நிறைவேற்றுவதற்கும் ஒரு காரணியாக இருக்க வேண்டும். அது முஸ்லிம்கள் ஒன்றிணைந்து தங்கள் உள்ளூர் மக்களுக்கு சேவை செய்திட மற்றும் சமூகத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் மதம், இனம் மற்றும் நிறத்தைப் பொருட்படுத்தாமல் உதவிட ஒரு தளத்தையும், இடத்தையும் வழங்குவதற்காகவும் ஆகும். புனிதக் குர்ஆனில் அதிகாரம் 4 வசனம் 37 இவ்வாறு கூறுகின்றது:

மேலும், அல்லாஹ்வை வணங்குங்கள். அவனுக்கு எதனையும் இணையாக்காதீர்கள். மேலும், பெற்றோருக்கும், நெருங்கிய உறவினர்களுக்கும் அனாதைகளுக்கும் ஏழைகளுக்கும், உறவினரான அண்டை வீட்டுக்காரர்களுக்கும், மேலும் ஓர் அந்நியராக இருக்கக் கூடிய அண்டை வீட்டுக்காரருக்கும் உங்கள் அருகில் கூட்டாளிகளாக இருப்போருக்கும், வழிப்போக்கர்களுக்கும். உங்கள் வலக்கரம் சொந்தமாக்கிக் கொண்டோருக்கும் கருணை காட்டுங்கள். நிச்சயமாக அல்லாஹ் கர்வம் கொண்டோரையும், பெருமையடிப்போரையும் நேசிப்பதில்லை.

இந்த வசனத்தில் புனித திருக்குர்ஆன் முஸ்லிம்களுக்கு ஒட்டு மொத்த அளவிலான மக்களுடனும் கருணை மற்றும் இரக்கம் காட்டும்படி அறிவுறுத்துகின்றது. அது அவர்களை அவர்களின் பெற்றோர், குடும்ப உறுப்பினர்கள், பிற உறவினர்கள் மற்றும் பாதிக்கப்படக் கூடிய சமூகத்தின் உறுப்பினர்களுக்கு சேவை செய்ய அழைக்கின்றது. அது ஒருவரின் அண்டை வீட்டுக்காரரின் உரிமைகளை நிறைவேற்றுவதற்கும் அதிக முக்கியத்துவம் அளிக்கின்றது.

அண்டை அயலார் என்பவர் ஒரு நபரின் அருகாமையில் வசிக்கும் மக்கள் மட்டுமல்ல. மாறாக, இஸ்லாத்தில் அண்டை வீட்டார் என்பதன் வட்டமானது மிகவும் பரந்து விரிந்ததாகும். அதில் அருகில் வசிப்பவர்கள் அதேபோன்று தொலைவில் வசிப்பவர்கள் ஆகியோரும் அடங்குவர். அதில் ஒரு நபரின் சகாக்கள், அவரது பயணத் தோழர்கள் இவை தவிர மற்றும் பலரும் அடங்குவர். எனவே, சாராம்சத்தில் இந்த நகர மக்கள் அனைவரும் இந்த பள்ளியின் அண்டை வீட்டினரே சமுதாய அமைதியை அழிப்பதற்கு பதிலாக இவ்வாறு வெவ்வேறு சமூகங்களைச் சேர்ந்த மற்றும் பல்வேறு நம்பிக்கைகளைக் கொண்ட மக்களிடையே அமைதியை வளர்ப்பதற்காகவே உண்மையான பள்ளிவாயில்கள் கட்டப்படுகின்றன.

சுருக்கமாக கூறவேண்டும் என்றால், பள்ளிவாயில்கள் முஸ்லிம்கள் தங்களுடைய படைப்பாளனாகிய எல்லாம் வல்ல இறைவனுடன் தங்களுடைய பிணைப்பை உயர்த்திக் கொள்வதற்காகவும் மேலும், தங்களுடைய சக மனிதர்களுடைய உரிமைகளை நிறைவேற்றுவதற்குமான ஓர் இடமாகும். இந்த தலையாய நோக்கங்களை நிறைவேற்றாத எந்த பள்ளிவாயில்களும் பயனற்றவை ஆகும். மேலும், எந்த நோக்கத்தையும் நிறைவேற்றாத வெற்று கூடுகளும் ஆகும். அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் உருவாக்கப்பட்ட காலத்திலிருந்தே அது உலகமெங்கிலும் பள்ளிவாயில்களைக் கட்டி வந்துள்ளது. மேலும், நாங்கள் எங்கு பள்ளிவாசல்களைக் கட்டினாலும் நான் இப்பொழுது கூறிய அந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நாங்கள் முயன்றே வந்துள்ளோம் என்ற உண்மைக்கு எங்களுடைய வரலாறு சான்று பகர்கின்றது. எங்களுடைய நடத்தை மற்றும் செயல்பாடு மூலமாக நாங்கள் எங்களுடைய ஜமாஅத்தின் முழக்கமான எல்லாரிடத்திலும் அன்பு; எவரிடத்திலும் வெறுப்பு இல்லை என்ற முழக்கத்தை செயல் ரீதியாக வெளிப்படுத்தவும் அதன்படி வாழ்ந்திடவும் நாடுகின்றோம்.

நாங்கள் அஹ்மதி அல்லாதவர்களுடனும், மேலும் முஸ்லிம் அல்லாதவர்களுடனும் நட்பின் பிணைப்பை உருவாக்கிட விரும்புகின்றோம். நாங்கள் பல்வேறு மதங்களுக்கு இடையிலான பேச்சுவார்த்தை முயற்சி செய்ய வேண்டும்.

நாங்கள் எங்களுடைய அண்டை வீட்டாரை மதித்து அவர்களை அரவணைக்கவும் செய்கின்றோம்.

நாங்கள் தேவையுடையோருக்கு உதவி செய்திட எப்போதுமே தயாராக இருக்கின்றோம். நாங்கள் பலவீனமானவர்கள் மற்றும் இழப்பிற்காளானோர் ஆகியோருடைய உரிமைகளை முன்னெடுத்துச் செல்கின்றோம். நாங்கள் எப்பொழுதும் சமூகத்திற்கு சேவையாற்றக் கூடிய மற்றும் பற்றுள்ள, நன்றியுள்ள குடிமக்களாக ஆகவும் இருக்கின்றோம். இதுவே எங்களுடைய நம்பிக்கையாகும். மேலும் இதுவே எங்களுடைய போதனையாகும். இதற்காகவே நாங்கள் பள்ளிவாயில்களைக் கட்டுகின்றோம்.

இதன் ஒளியில் ஓர் பள்ளிவாசல் என்பது அச்சப்பட வேண்டிய ஒன்றல்ல என்று உங்கள் அனைவருக்கும் தெளிவாகியிருக்கும் என்று நான் நம்புகிறேன். மேலும் அதற்காக பிரார்த்தனையும் செய்கின்றேன். ஓர் உண்மையான பள்ளிவாசலானது எல்லாம் வல்ல இறைவனை வணங்குவதற்காக மக்களுக்கான ஒரு மையம் மட்டுமல்ல. மாறாக, அது சக மனிதர்களுக்கு சேவையாற்றுவதற்கான ஓர் அரங்கமும் ஆகும்.

அதிகாரம் 107, வசனம் 57-ல் திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகின்றது:

எனவே வணங்கக் கூடியவர்களுக்கு கேடுதான். அவர்கள் தங்கள் தொழுகையில் கவனம் அற்றவர்களாக இருக்கின்றனர். அவர்கள் மக்களால் காணப்பட வேண்டும் என்று மட்டுமே விரும்புகின்றனர்.

இறைவனை வணங்கிக் கொண்டு ஆனால் அவனுடைய படைப்புகளின் உரிமைகளை வழங்குவதற்கு தவறக் கூடிய மக்களின் தொழுகையானது நிராகரிக்கப்படும் என்று இந்த வசனங்கள் திட்டவட்டமாக அறிவிக்கின்றன. அவர்களுடைய வணக்கமும், மேலும் அவர்கள் பள்ளிவாசலில் நுழைவதும் ஒரு நடிப்பு மற்றும் மேலோட்டமான சைகையும் அன்றி வேறொன்றுமில்லை. அவர்களுடைய தொழுகைகள் பொருளற்றவை என்பதிலும், மேலும் அவர்களுடைய நயவஞ்சகத் தனமான செயல்கள் அவர்களை அவர்களுடைய இழிவு மற்றும் நிராசையின் பக்கமே இட்டுச் செல்லும் என்பதிலும் திருக்குர்ஆன் மிகத் தெளிவாக இருக்கின்றது. இதன் விளைவாக உண்மை என்னவென்றால், எல்லாம் வல்ல அல்லாஹ்வை வணங்கக் கூடிய உண்மையான முஸ்லிம்கள் சமுதாயத்தின் அமைதிக்கும், நலனுக்கும் தீங்கு விளைவிக்கக் கூடிய அல்லது எதிர்மறையான விளைவை ஏற்படுத்தக் கூடிய எதனையும் செய்ய மாட்டார்கள் என்பதாகும். பிற மக்களுடைய உரிமைகளை பறிப்பதற்கு அல்லது அதற்கு பங்கம் விளைவிப்பதற்கு அவர்கள் விரும்பவும் மாட்டார்கள். ஏனெனில், அவ்வாறு செய்வது அவர்களுடைய நம்பிக்கைக்கு துரோகம் விளைவிப்பதும் மேலும் புனித திருக்குர்ஆன் மற்றும் புனித நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போதனைகளை கைவிட்டு விடுதலும் ஆகும்.

எனவே இந்த பள்ளிவாயில் குறித்து மீண்டும் உங்களுக்கு உத்திரவாதம் அளிக்கின்றேன். அச்சம் கொள்வதற்கோ அல்லது கவலை கொள்வதற்கோ எந்தக் காரணமும் உங்களுக்கு இல்லை. அமைதியை நேசிக்கக் கூடிய எல்லா மக்களுக்காகவும் இந்த பள்ளிவாசலின் கதவுகள் என்றென்றும் திறந்தே இருக்கும்.

மானுடத்தை மதிப்பவர்களுக்காக அவை எப்போதும் திறந்தே இருக்கும். அமைதியின் ஓர் அடையாளமாகவும், இந்த நகரம் முழுமைக்கும் மேலும் அதை தாண்டியும் அன்பு, கருணை மற்றும்

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 8 Thursday 19 OCTOBER 2023 Issue No.42

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

சகோதரத்துவத்தை வெளிப்படுத்தக் கூடியதாகவும் இன்ஷா அல்லாஹ் இறைவன் நாடினால் இந்த பள்ளிவாசல் தன்னை நிரூபிக்கும் என்பதில் நான் முழுமையான நம்பிக்கை கொண்டவனாக இருக்கின்றேன்.

தன்னுடைய சுற்றுப்புறங்களை ஒளிமயமாக்கக் கூடிய ஒளியை ஒவ்வொரு திசையிலும் பரப்பக் கூடிய கலங்கரை விளக்கமாக அது சேவையாற்றும். இறைவனை வணங்குபவர்கள் ஒன்றுகூடி தங்களுடைய அண்டை அயலாருக்கு சேவையாற்றக் கூடிய மேலும் அவர்களுடைய உரிமைகளை நிறைவேற்றக் கூடிய அமைதியின் இல்லமாக அது விளங்கும். இஸ்லாத்தின் அறிவொளி பெற்ற போதனைகளை குறிப்பிட்டுக் காட்டக்கூடியதாகவும் மேலும் எங்கள் மார்க்கம் குறித்து மக்களிடையே இருக்கக் கூடிய அச்சங்கள் மற்றும் கட்டுக் கதைகளை அகற்றக் கூடியதாகவும் அது இருக்கும். இறைவன் நாடினால் இந்த உள்ளூர் மக்களின் உள்ளங்களிலும், மனங்களிலும் இன்னும் மிச்சம் இருக்கக் கூடிய நீடித்திருக்கக் கூடிய பயங்கள் ஒட்டுமொத்தமாக காணாமல் போய்விடும். அவர்கள் இந்த பள்ளிவாசலை கண்டாலோ அல்லது இங்கு வணங்கக் கூடியவர்களை சந்தித்தாலோ அச்சப்படுவதற்கும் அல்லது நடுக்கமடைவதற்கும் எந்த காரணமும் இல்லை என்பதை வெகு விரைவாக அவர்கள் உணர்ந்து கொள்வார்கள்.

இத்தகைய கூற்றுகளை கூறுவது எளிதாக இருந்தாலும் நான் மிகவும் நம்பிக்கையாக இருப்பது என்னவென்றால், நீங்களே மிக விரைவில் அஹ்மதிகள் தாங்கள் போதிப்பதின்படி செயலாற்றுபவர்கள் ஆவர் என்பதற்கும், அவர்கள் இஸ்லாத்தின் அமைதியான போதனைகளை முழங்குவது மட்டுமல்லாமல் அவற்றை மேலோங்கவும் செய்வார்கள் என்பதற்கும் நீங்களே மிக விரைவில் சான்று பகர்வீர்கள். இந்த பள்ளிவாசலின் நோக்கங்கள் குறித்து நான் கூறியவை, ஒரு கசப்பான மருந்தின் மீது தடவப்பட்ட இனிப்பான வார்த்தைகள் அல்ல. மாறாக, அவை ஒரு நேர்மையான உண்மையைக் குறிப்பிடுகின்றன என்பதை உள்ளூர் சமூகம் மிக விரைவில் உணர்ந்து கொள்ளும் என்பது என்னுடைய உறுதியான நம்பிக்கையாகும்.

இந்த நேரத்தில் நான் மேலும் கூற விரும்புவது என்னவென்றால் சமுதாயத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும், அவர்கள் முஸ்லிம்கள் ஆயினும் அல்லது முஸ்லிம் அல்லாதவர்களாயினும் அவர்கள் ஒரு மதத்தை பின்பற்றுபவர் அல்லது மதத்தை பின்பற்றாதவர் ஆயினும் அவர்கள் அனைவருக்கும் உலகின் அமைதிக்காவும், நலனுக்காகவும் இணைந்து பணியாற்றுவது கடமையாகும். ஒருவர் மற்றவருக்கு எதிராக குற்றச்சாட்டுகளைக் கூறுவதற்குப் பதிலாக ஒருவர் மற்றவருடைய குறைகள் மற்றும் பலவீனங்களை சுட்டிக் காட்டுவதற்கு பதிலாக நாம் நம்முடைய உள்ளங்களை மற்றவர்களுக்காக திறந்து வைத்து கருணையையும் இரக்கத்தையும் வெளிப்படுத்திட வேண்டும். ஒருவர் மற்றவருடைய மதங்களை தாக்குதவதற்கு பகரமாக மேலும் தேவையில்லாமல் மற்றவர்களை தூண்டுவிடுவதற்கு பகரமாக பரஸ்பர மரியாதையையும், சகிப்புத் தன்மையையும் வெளிப்படுத்துவதே இக்காலத்தின் அவசரமான தேவை ஆகும். உண்மையான மற்றும் நீடித்திருக்கக் கூடிய அமைதியானது நமது கை விரல்களைச் சொடக்குவதன் மூலம் சட்டென்று உருவாகி விடாது. மாறாக, நம்முடைய வேறுபாடுகள் நம்மை பிளவுபடுத்தி மேலும் சமுதாயங்களை உடைத்திட அனுமதிப்பதற்கு பகரமாக நம்மை ஒன்றுபடுத்தக் கூடிய மேலும், நம்மை ஒன்றிணைக்கக் கூடிய விஷயங்களின் மீது நாம் கவனம் செலுத்துவது இதற்காக தேவைப்படுகின்றது.

உலகின் வரலாற்றில் தேசிய அளவிலும், சர்வதேச அளவிலும் முழு உலகமும் எதிர் எதிர் துருவங்களாகவும் பிளவுபடுத்தப்பட்டும் இருக்கக் கூடிய ஒரு முக்கியமான காலகட்டத்தை நாம் கடந்து கொண்டிருக்கின்றோம் என்று நான் உண்மையாகவே நம்புகிறேன்.

நாம் அழிவின் விளிம்பில் நின்றுக் கொண்டிருக்கின்றோம். எனவே இப்பொழுது ஒரு அடி பின்னால் சென்று மனித இனத்தின் எதிர்காலத்தை பாதுகாப்பதற்காக நம்முடைய எல்லா சக்திகளிலும் கவனம் செலுத்த வேண்டிய காலம் இதுவாகும். நம்முடைய மனிதநேயத்தை காண்பிப்பதற்கான நம்முடைய நாடுகளிலும், நிச்சயமாக முழு உலகிலும் நம்முடைய சமூகங்களில் அமைதியை ஏற்படுத்துவதற்காக நமது முயற்சிகளில் எதனையும் விட்டு வைக்கக் கூடாத ஒரு காலமாக இது இருக்கின்றது. நாம் ஒன்றிணைந்து ஒருவர் மற்றவருடைய நம்பிக்கைகளை மதித்தால் மட்டுமே இன்று உலகின் பெரும் பகுதியில் ஆழமாக வேரூன்றி விட்ட கசப்பான பிளவுகளை குணப்படுத்துவதற்கான துவக்கம் ஏற்படும். அப்பொழுதுதான் நம்முடைய பிள்ளைகளுக்கு நம்பிக்கையின் சொத்தினை நாம் வாரிசுரிமையாக வழங்கிட முடியும். அப்பொழுதுதான் இனிவரும் தலைமுறையினருக்கு ஒரு வளமான மற்றும் அமைதியான உலகினை நாம் விட்டுச் சென்றிட முடியும்.

நாம் நமது சுய நலன்கள் மற்றும் பேராசையின் காரணமாக குருடர்களாகிவிடக் கூடாது. மாறாக, தமது கண்களை திறந்து பொதுவான நலனை காண வேண்டும். என்னுடைய மனப்பூர்வமான நம்பிக்கையும், பிரார்த்தனையும் என்னவென்றால், நாம் அனைவரும் நம்முடைய மார்க்கம் அல்லது நம்பிக்கைகள் என்னவாக இருந்தாலும்; ஒரு நன்மையின் ஆன்மாவுடனும், மேலும் பரஸ்பர மரியாதையுடனும் இணைந்து பணியாற்றிட வேண்டும்.

மேலும், இன்னும் மேன்மையுடைய உலகினை நம்மை பின்தொடர்ந்து வருபவர்களுக்காக நாம் உருவாக்கிட வேண்டும் என்பது நம்முடைய பொதுவான இலட்சியமாகவும் இருக்க வேண்டும். நம்முடைய பொதுவான குறிக்கோளானது எல்லா சமுதாயங்களை சேர்ந்த மக்களிடையேயும் அமைதி நல்லிணக்கம் மற்றும் நல்லெண்ணத்தை வளர்த்தெடுப்பது என்பதற்காகவே இருக்க வேண்டும். இனம், மதம் அல்லது நம்பிக்கையின் வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு மக்கள் அருகருகே வாழக் கூடிய ஓர் அமைதியான உலகத்தை நமக்கு பின்னால் நம்முடைய பிள்ளைகளுக்காக விட்டு செல்வதற்காக தொடர்ந்து ஆசைப்படுவதுடன் கடுமையாக முயற்சியும் செய்திட வேண்டும்.

எல்லாம் வல்ல அல்லாஹ் நாம் அனைவரும் ஒன்றிணைந்து மனித இனத்தின் மேன்மைக்காக பணியாற்றிட உதவி செய்வானாக. ஆமீன்.இறுதியாக நான் எங்களுடன் இணைந்த உங்கள் அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை நான் நன்றி கூற விரும்புகின்றேன். எல்லாம் வல்ல அல்லாஹ் உங்கள் அனைவரின் மீதும் அருள் செய்வானாக.உங்களுக்கு மிக்க நன்றி!


மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத்
ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

* * * * *

(தமிழாக்கம்: ஷேக் ஃபயாஸ் அஸ்லம்)

**National Watch Company**
**Sales & Service**

**B. Mohamed Adil**
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM 99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT 99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad